12-7

1 D.R. ஜெ 127
4-1905

மோலீஸ் வர்த்தமான்

JL
Z 911,193 N05 PV
N05.
142385.

Registered No. M.

# போலீஸ் வர்த்தமானி.

மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை.

பாகம் 1.] சென்னை அக்டோபர்மீ 1905ஹ [இ-ம் 1.

## பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| சபா விஷயம் ... ... ... | 1 |
| போலீஸ் இலாகாவைப்பற்றி பொதுஜன அபிப்பிராயம் ... | 4 |
| கான்ஸ்டேபிள்களை ஒழுங்காய் வைக்கவேண்டும் ... ... | 9 |
| அவர்களுக்கு ஓய்வுகால வேலைக்கு ரீடிங் ரூமும் அப்பியாசமும் ஏற்படுத்தவேண்டும் ... ... ... | 11 |
| குற்றவாளிகளின் சீர்திருத்தம் ... ... ... | 12 |
| சில கெட்டிக்காரத்தனமுள்ள வஞ்சகர்கள் ... ... | 12 |
| எம். அப்துல் கபார்கான் சாகிப்கான் பகதூர் ... ... | 16 |
| சென்னை இராஜதானியிலுள்ள திருடர்கள் ... ... | 19 |
| போலீஸாரும் சட்டமும் ... ... ... | 23 |
| ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனும் அவனுடைய ரஜாவும் ... | 25 |
| சிலோன் போலீஸில் [illegible] முறை ... ... | 26 |
| வர்த்தமானக் குறிப்புகள் ... ... ... | 28 |
| பத்திராதிபர் அறிவிப்பு ... ... ... | 32 |



| சந்தா விவரம். | | விளம்பர விகிதங்கள். |
|---|---|---|
| வருடம் 1-க்கு | ... 2—8—0 | மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு 3-0-0 |
| ஆறு மாதத்திற்கு | ... 1—4—0 | வருஷத்திற்கு கடிதமூலமாய் |
| மாதம் 1-க்கு | ... 0—4—0 | தெரிந்துகொள்ளலாம். |

142385
Z 211,193 NO5 PY
NO5-1.1
127
127
MADRAS



# போலீஸ் வர்த்தமானி.

மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை.

பு-ம் I.] சென்னை செப்டம்பர்மீ 1905 [இ-ம். 1

## சுயவிஷயம்.

இத்தேசத்தில் போலீசாருடைய வேலையைக் குறித்த நன்மை தீமைகளைப் பற்றி ஜனங்களுக்குத் தெரியப்படுத்துகிற வர்த்தமான பத்திரிகைகள் பிரசுரமாகி வருகிறது எல்லோருக்கும் தெரிந்த விஷயமல்லவா? இராஜாங்கத்தில் இதர உத்தியோகங்களைப் பற்றி பிரதி மாதங்களில் பிரசுரப்படுத்தி வரும் பத்திரிகைகளின் நற்குணங்களையும், தீயகுணங்களையும் தெரியப்படுத்தி ஜனங்களுக்கு விசேஷமான நன்மையை செய்துவர, இந்த போலீஸ் சம்பந்தமான விஷயத்தில் கிஞ்சித்தேனும் சிரத்தையில்லாமல் படித்தவர்கள் அனேகர் வெறுமனே இருக்கிறார்கள். அனேக ஜனங்களுக்கு போலீஸ் என்பது என்னவென்றால் பிரஜைகளை இம்சை செய்து, லஞ்சம் வாங்கி, இந்துதேசத்திய சிக்ஷா ஸ்மிருதி பிரகாரம் (I. P. C.) திருடர்களை கண்டுபிடித்து சிக்ஷிக்காமல் அவர்களை யதேச்சையாய் சஞ்சரிக்க விட்டுவிடும் உத்தியோகஸ்

தர்களின் சமூகம் ஸம்பிரதாயம். சாதாரணமாய் ஜனங்கள் திருடர்களை போலீஸாரிடம் ஒப்புவிக்கிறதைப் பார்க்கிலும் அத்திருடர்களுடனே சமாதானமாய் ஒரு ஏற்பாடுடன் வாழ்வது நன்மையென்று நினைக்கிறார்கள். ஜனங்கள் போலீஸ் உத்தியோகஸ்தரை நம்புகிறதைப் பார்க்கிலும் பெருந் திருடனை நம்ப விரும்புவார்கள். ஜனங்களுக்கு போலீஸாரிடத்தில் இவ்விதமான இழிவான அபிப்பிராயம் உண்டாயிருக்கிறது: ஆகையால் கற்றவர்கள் அனேகர் இந்த உத்தியோகத்தில் பிரவேசிப்பதற்குப் பின்வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட அபிப்பிராயங்கள் தினம்தினம் ஜனங்களின் மனதில் நிலை பெற்று, மதாக்கிரோஷத்தில் எப்படி ஒருவன் மனது ஸ்திரமாகுமோ அப்படி இப்போலீஸ் விஷயத்திலும் உண்டென்பதை நினைக்க விசனகரமாகவிருக்கிறது? திருடர்களுக்கு போலீஸா ரென்றால் பயத்தை உண்டாக்குவதல்லவோ! நியாயங்களை அனுசரித்து நிம்மதியாய் காலக்ஷேபம் செய்யும் ஜனங்களை போலீஸார், சரண மடைந்தவர்களை எப்படி அபயம் கொடுத்து இரக்ஷிப்பார்களோ, அப்படி இரக்ஷிக்க வேண்டிய கடமையை வகித்தவர்களாகிறார்கள், ஆகிலும் போலீஸார் தலைகீழாய் வேலைசெய்கிறார்கள். இதற்குக்காரணம் தெரிவிக்கக்கூடாமலா யிருக்கின்றது? இப்படிப்பட்ட அபிப்பிராயம் காரணத்தோடு கூடியதே என்பதற்குச் சந்தேகமில்லை. உலகத்தில் எதுவும் தோஷ மில்லாமல் குண முள்ளதாய் பரிபூரண மடைவது அரிது. போலீஸாருக்கு ஜனங்களின் நன்னடத்தை, கெட்ட நடத்தை, சுபாவிகமாக உண்டான நடத்தைகள், கெட்ட மார்க்கங்கள் முதலானவைகளை நன்றாய்ப் பரிசீலனைசெய்து தெரிந்துக் கொள்வது கஷ்ட மென்பது தெரிந்த விஷயமே. ஆகிலும் இந்த தேசத்தின் போலீஸ்உத்தியோகத்தின்முறைமை, நாகரீகமுள்ள இதர தேசங்களின்போலீஸ் முறைமைகளைப்பார்க்கிலும்சாமர்த்தியத்தில் குறைவாக விருக்கிறது. இப் போலீஸ் விஷயமாக ஜனங்கள் நினைக்கும் அபிப்பிராயங்கள் சரியான சோதனை சாதனங்களாகா. பிரயோஜனமாகவாவது அப்பிரயோஜனமாகவாவது



செய்த வேலையை நன்றாய் ஆராய்ந்தால் தெரியக் கூடும். போலீஸார் செய்யும் அநியாய லோபங்கள், துர் நடத்தைகள் சில சமயங்களில் வெட்டவெளிச்சமாகின்றன. இப்படிப்பட்ட பெரிய குறைகள், நீதி யற்ற நடவடிக்கைகள், துன்மார்க்கமான காரியங்கள் சிலவற்றை நிருபத்துடன் பகிரங்கமானவைகளை பத்திராதிபர்கள் தம்முடைய பத்திரிகைகளில் பெரிய எழுத்துகளால் அச்சிட்டு ஜனங்களுக்கு வெளிப்படுத்துகிறார்கள். ஜனங்களோ நியாய அநியாயங்களை சாவகாசமாய் விசாரிக்க அவகாசமில்லாமல் அசிரத்தையாய் உடனே குற்றத்தை ஸ்தாபிக்க சம்மதிக்கிறார்கள். ஆகையால் போலீஸ் உத்தியோகத் தன்மை, அவர்கள் சரிவர நடத்த வேண்டிய காரியங்களில் உண்டான கஷ்டங்கள் முதலியவைகளை நன்றாயறிந்து ஜனங்களுக்கு வெளிப்படுத்தினால் இப்படிப்பட்ட குற்றங்கள் தெளிவாகும். இப்படிப்பட்ட குறைகளை நிவாரணஞ் செய்ய இந்த "போலீஸ் வர்த்தமானி" என்னும் பத்திரிகை பிரதி மாதமும் ஒரு தடவை ஜனங்களுக்கும், போலீஸாருக்கும் தகுந்த உதவி செய்ய அச்சிடப்பட்டு பிரசுரமாகி வருகிறது. இதுவே இப்பத்திராதிபரின் முக்கிய அபிப்பிராயம். இது போலீசாருக்கு உதவி செய்து மனோஉற்சாகத்தை உண்டுபண்ணும் என்று நாம் நம்புகிறோம். போலீஸ் பெரிய உத்தியோகஸ்தர்களும், இன்னும் அதைச் சேர்ந்த தாழ்வான உத்தியோகஸ்தர்களும் எவ்வளவு சாமர்த்திய முள்ளவர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. தங்களுடைய ஜில்லாக்களின் வெளியில் என்ன ஆச்சரியகரமான சமாசாரங்கள் நடக்கின்றனவோ அவைகள் அவர்களுக்குத் தெரிய வராது. இப்படியிருக்க இதர இராஜாங்கங்களில் நடக்கும் விஷயங்களைத் தெரிந்துக்கொள்வது கஷ்டசாத்தியமல்லவா? போலீஸார்களவுகளைக்கண்டுபிடித்துஅவற்றைத்தடுக்கச்செய்யும் பிரயத்தனங்கள் பிரதி தேசங்களிலும் வித்தியாசப்படும். ஆனால் வெவ்வேறு தேசங்களில்போலீஸார் அனுசரிக்கும் முறைமைகள் ஒன்றாய் சேர்ந்தால் மிகவும் நன்மையைத் தரு மல்லவா? ஆக

வே திருட்டு சுபாவமுள்ள வகுப்பினரின் சரித்திரத்தையும் முக்கியமான வழக்குகளில் ஐகோர்ட்டார் செய்யும் வியவஸ்தைகளையும் மற்ற நியாயவிசாரணை சம்பந்தமான யுக்திக்குறிப்புகளையும் கனவுகண்டு பிடிக்கும் கதைகளையும், போலீஸார் வேலை, பெயர்போன திருடர்களின் சரித்திரம் முதலியவற்றையும் அப்போதைக்கப்போது இப்பத்திரிகையில் வெளியாக்க முன்வந்துள்ளோம். மேலும் ஆங்கிலத்தில் யாம் பிரசுரித்து வரும் 'போலீஸ் வர்த்தமானி'யானது இந்தியா, பர்மா, சிலோன் முதலிய பிராந்தியங்களில் விசேஷமாய்ப் பரவியிருப்பதோடு அவ்விடங்களின் பெருத்த உத்தியோகஸ்தர்களால் நன்கு மதிக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக அந்தந்த உத்தியோகஸ்தர்களுக்கும் வெவ்வேறு கவர்மெண்டுகளுக்கும் யாம் மனப்பூர்வமான வந்தனமளிக்கக்கடமைப் பட்டிருக்கின்ற தன்னியில் இதுபோலவே இந்த 'போலீஸ் வர்த்தமானி' என்னும் தமிழ்ப்பத்திரிகைக்கும் அவர்களின் ஆதரவு பெருகுமென்பதாக முற்றும் நம்புகின்றோம்.

---

## போலீஸ் இலாகாவைப்பற்றி பொதுஜன அபிப்பிராயம்.

“போலீஸ் இலாகாவைப்பற்றியும் அவ்விலாகா செய்துவரும் நிர்வாகத்தைப்பற்றியும் பொதுஜன அபிப்பிராயம்” என்று தலைப்பெயரிட்ட ரிபோர்ட்டின் இரண்டாவது அத்தியாயத்தைப் பார்க்குமளவில் எவ்வளவு கபடமற்ற மனதுடன் கமிஷனர்கள் இந்த ரிபோர்ட்டை எழுதியிருக்கிறார்களென்பது விளங்கும். இந்த தேசத்தில் தகுந்த உயர்பதவி உத்தியோகத்திலிருந்த ஸர் ஜான் உட்பர்ன் என்பவர், போலீஸ்வேலைக்காரர்களைப்பற்றி எழுதியிருக்கிற வியாசத்திலிருந்து ஸ்தல உத்தியோகஸ்தர்களாகவும் இரகசிய விசாரணை செய்யும் கடமையை வகித்த சப் இன்ஸ்பெக்டர்களும் ஹெட் கான்ஸ்டேபிள்களும் “அயோக்கியத்தன்மையையும் கொடுமைசெய்வோர்களாயுமிருக்கிறார்கள்” என்று அவர் சொல்லியிருக்கிற ஒரு அபிப்பிராயத்தை இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் கமிஷனர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அபிப்பிரா



யத்தை கமிஷனர்கள் எல்லாரும் திட்டமாய் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவ்விலாகாவில் சுவதேசிகள் நியமனமாகி வேலைசெய்து வருகிற பதவிகளிலெல்லாம் யோக்கியதைக் குறைவும் துஷ்டச் செய்கைகளும் சாதாரணமாய் வியாபித்திருக்கின்றனவென்று அடுத்துவரும் ஐந்து பாராக்களிலும் சில நடவடிக்கைகளைகுறித்துக் காண்பித்தே எழுதப்பட்டிருக்கிறது. கான்ஸ்டேபில்கள் பீட்டுக்குப் போய் விசாரணை செய்யும் சந்தர்ப்பத்திலும், குற்றக் கேஸ்களைக் கண்டு பிடிக்க அமல் நடத்தும் சந்தர்ப்பத்திலும், சுகாதார விரோதமாய் நடக்கும் (Nuisance) சில்லரை குற்றச் செய்கைகளுக்காக கௌரவமான மனிதர்களைப்பிடிக்கும் சந்தர்ப்பத்திலும் ஜனங்களிடத்திலிருந்து ரூபாயைப்பிடுங்குகிறார்களென்றும்; தங்களுடைய உத்தியோகநிலைமையில்செய்யும் எல்லா வேலைகளிலும் ஒருவிதமான வரும்படி கிடைக்கும் வழியை ஹெட்கான்ஸ்டேபில்களும் சப் இன்ஸ்பெக்டர்களும் தேடுகிறார்களென்றும், எந்த விசாரணையையும் நடத்தும் போலீஸ் உத்தியோகஸ்தனும் ரூபா யாகிற தானியத்தை அறுவடை செய்கிறானென்றும், தகுந்த சொத்துகளைக் குறித்து விவாதம்நேர்ந்தாலும் முக்கியமாக செழிப்பாய் விளையக்கூடிய நிலங்களுக்குப் பாய்கிற பங்காளத்து மகாணிகளின் அடைப்புத் திறப்பு விஷயத்தில் நீர்ப் பாய்ச்சல் சண்டை சம்பவித்தாலும் போலீஸ்காரர்கள் அந்த சந்தர்ப்பத்தில் பெருத்த கொள்ளையிடுகிறார்களென்றும், வாதிகளையும், பிரதிவாதிகளையும், சாக்ஷிகளையும் போலீஸ்தார்களின் இஷ்டப்படி சொல்லவேண்டுமென்று தொந்திரவுசெய்வதும், விசாரணைகாலங்களில் கிராமங்களிலுள்ள மதிப்புற்ற நல்ல மனிதர்களை அனேகவிதமாய் இவ்விதம் சங்கடப்படுத்துகிறார்களென்றும் கமிஷன் ரிபோர்ட்டின் மேற்குறிப்பிட்ட ஐந்து பாராக்களிலும் எடுத்துக்காண்பிக்கப்பட்டிருக்கிறது. இன்ஸ்பெக்டர்களும் “தங்களுக்குத் தாழ்ந்த உத்தியோகஸ்தர்களை விட கொஞ்சம் குறைவான அயோக்கியத்தன்மையுள்ளவர்களாயிருக்கிறார்களேயொழிய வேறில்லை.” மதிப்பையும் கௌரவத்தையும் விரும்புகிற பெற்றோர்கள் தங்களுடைய குமாரர்களை போலீஸ் இன்ஸ்பெக்டர் வேலையை ஒப்புக்கொள்ளவேண்டாமென்று சொல்லும்படியான மாதிரியாய் இன்ஸ்பெக்டர்களுடைய பெயரும் கீர்த்தியும் கெட்டுப்போயிருக்கின்றன. சூபரின்டெண்டு வேலையிலிருக்கிற ஐரோப்பியர்களைப் பற்றி கமிஷன் என்ன அபிப்பிராயப்படுவதென்றால் “அவர்களில் அபூர்வமாய் சிலர்கள் தான் கவனியமாயும் துன்மார்க்கத்தை யனுசரிக்காமலுமிருக்கிறார்கள்” என்பது. அவர்களும்கூட ஜனங்களோடு நெருங்கிப்பழகி தேச

பாஷையைப் பேசக்கற்றுக்கொள்ளாததாலும் பொதுஜன அபிப்பிரா
யத்தை கவனிக்காதவர்களாயும், தங்களுடைய கடமையின் குணகுணங்
களை யறிந்துகொள்ளாததினாலேதான் சன்மார்க்கத்தட விருக்கிறார்க
ளென்றும் கமிஷனர்களின் கருத்து.

போலீஸ் டிபார்ட்டுமெண்டின் கீழ்படி யுத்தியோகஸ்தர்களின் நடத்
தையைப்பற்றி யோசிக்கவேண்டுமானால் சில விஷயங்களை ஞாபகத்தில்
வைத்துக்கொள்ள வேண்டும். முதலாவது ஞாபகமிருக்க வேண்டிய
தென்னவெனில் கமிஷன் ரிபோர்ட்டின் இரண்டாவது அத்தியாயம் பூரா
வும் கமிஷனுடைய முன்சாக்ஷியாக விசாரணைசெய்யப்பட்ட சமாசாரங்
களின் சுருக்கமான வர்ணனை யென்பதும், அந்த அத்தியாயத்தின் பெயரி
னாலேயே அத்தியாயம் முழுமையும் டிபார்ட்டுமெண்டைப்பற்றி குறிப்
பான பொதுஜன அபிப்பிராயமேயொழிய அவ்வபிப்பிராயங்களின்
சாராம்சத்தைப்பற்றி வியவகரித்துடைத்து வாஸ்தவத்தை நிர்த்தாரணை
செய்ததல்லவென்றும், கமிஷனர்கள் தங்களுடைய முன் ஆஜராகி டிபார்
ட்டுமெண்டின் நடவடிக்கையைப்பற்றி பிரசங்கம்செய்த சாக்ஷிகளின்
நிலைமையிலேயே தங்களையும் வைத்துக்கொண்டு அவர்களுடைய பொது
அபிப்பிராயத்தைப்பற்றியே பேசியிருப்பதேதவிர வேறல்ல. போலீஸிலா
காவின் யோக்கியதையோ அல்லது அயோக்கியதையோ அதின்பேரில் ஜனங்களு
டைய தாத்பரியம் எதுவோ அவைகளைப்பற்றி மாத்திரம் கமிஷனர்கள்
ஆரம்பத்தில் வியவகரிக்கும்பொழுது, கூடியவரையிலும் குற்றஞ்செய்த
வர்களையே கண்டுபிடித்து தண்டனைக்குக் கொண்டுவரும் சாமர்த்தியம்
உத்தியோகஸ்தர்களிடமிருக்கிறதென்று கமிஷனர்கள் ஒப்புக்கொள்ளு
கிறார்கள். இந்த குணத்தையிட்டே ஒரு இடத்தில் போலீஸ் ஸ்டேஷன்
ஸ்தாபிக்கப்பட்டிருப்பதை மாற்றி வேறொரு இடத்தில் ஸ்திரப்படுத்த உத்
தேசமிருக்கிறதாக ஜனங்களுக்குத் தெரிந்தால் அவ்விடத்தைவிட்டே ஸ்டே
ஷனை எடுக்கக்கூடாதென்று பக்கத்து ஜனங்கள் வாதிக்கிறார்கள்.
இதையுத்தேசித்தால் என்ன தோன்றுகிறது. ஏதோசற்றேக்குறைய போ
லீஸ்வேலை செம்மைபட்டு டிபார்ட்டுமெண்டு நல்ல ஸ்திதிக்கு வந்துகொ
ண்டிருக்கிறதென்றும், தங்களுடைய முன் அபிப்பிராயமளித்த மகாஜ
னங்கள் போலீஸிலாகாவைப்பற்றி வேலையிலும் நடவடிக்கையிலும் ஜாஸ்
தியான குறைவாகப் பேசியது சகலமானவர்களும் ஒப்புக்கொள்ளத்தகாத
தென்றும், அவர்களால் வர்ணனை செய்யப்பட்ட குற்றங்களும் குறைவு
களும் பொதுவாய் ஜனங்களுடைய நடத்தையினாலேயும் சுவல்பசம்பளத்
தில் பிழைக்கவேண்டியதாய்விடுகிற வேலைக்காரர்களின் தாழ்ந்த நிலைமை



யினாலேயு மேற்படுகிறதென்றும் கமிஷனின் உத்தேசம். இருந்த போதி
லும் டிபார்ட்டுமெண்டை மொத்தமாய்ப்பார்க்குமளவில் உத்தியோகஸ்தர்
களிடத்தில் திறமை குறைந்திருக்கிறதென்றும், டிபார்ட்டுமெண்டின்
நடவடிக்கை குற்றத்துக்கிடம் கொடாதபடியாய் சரியானபடி மேல்பார்
வையில்லை யென்றும், ஜனங்களுடைய மனதில் டிபார்ட்டுமெண்டைப்
பற்றி நல்ல அபிப்பிராயத்தை உண்டாக்க உத்தியோகஸ்தர்கள் தவறிவிட்
டார்களென்றும் தோன்றுகிறது. இந்த வியவகாரங்களையுத்தேசித்தால்
கமிஷனர்கள் இந்த அத்தியாயத்தில் டிபார்ட்டுமெண்டைப்பற்றி தங்க
ளுடைய சொந்த எண்ணத்தை விவரிக்காமல் முன்னுக்குப் பின் உதயக்
கூடிய அன்னியர்களுடைய அபிப்பிராயத்தினாலும் முடிவுகளினாலும் நட
த்தப்பட்டார்களென்று இந்தியா கவர்ண்மெண்டார்கள் நினைக்கிறார்கள்.

போலீஸ் டிபார்டு மெண்டைப்பற்றி விசாரிக்கும்போது ஞாபக மிரு
க்கவேண்டிய மற்றொருவிஷயமேதெனில் இங்கிலீஷ் பாஷையின் பயிற்
சியால் உண்டாகக்கூடிய நற்குணங்கள் இந்த டிபார்ட்டுமெண்டை எட்டி
ப்பார்க்கவே இல்லை. ரெவினியூ இலாகாவிலும் நீதியிலாகாவிலும் மாத்
திரம் படித்துத்தேர்ந்தவர்கள் உத்தியோகத்திலிருப்பது ஜாஸ்தியானதால்
அந்த உத்தியோகஸ்தர்கள் போலீசுகாரர்களைவிட குணசம்பன்னர்களா
யிருக்கிறார்கள். போலீசு இலாகாவில் அவ்விதமில்லையாதலால் குணத்
தாழ்வு ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. எந்தமாதிரி போலீஸ் சிப்பந்தி
களை யமைக்கவேண்டுமென்று நினைத்து அவ்விதம் வேறு சிப்பந்திகளையும்
இதர நடவடிக்கைமாதிரிகளையும் ஏற்படுத்தினாலும் பரம்பரையான நற்குண
ங்கள் அதனிடத்தில் சுவயமாகவே உண்டாகாவிட்டால் அது கெட்டேயிருக்கும்.
அவ்விதமே தனித்தனி மனிதர்களுடைய குணமும் கெட்டேயிருக்கும். நற்குண
முள்ள ஒரு சப் இன்ஸ்பெக்டர் தனக்கு சமத்துவமான வேலைக்காரர்களை
விட ஜாஸ்தி புத்தி யுள்ளவனாயும் கபடமுள்ளவனாயுமிருந்தால் அவனையும்
சந்தேகிக்கும்படி செய்கிறது. சுதேசி உத்தியோகஸ்தர்கள்தான் இப்படி
யிருக்கிறார்களே ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுடைய நிலைமைபார்ப்போ
மென்றால் பெரும்பான்மையும் இவர்கள் நல்நடத்தை யுள்ளவர்களென்றே
சொல்லி விடலாம். கமிஷனர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறபடி குண
பேதமேற்படுவதின்காரணம் தற்கால அனுஷ்டானமாதிரிகளை ஏற்படுத்து
வதற்குமுன் ஆரம்பத்திலேயே சிறுவர்களை சரியானபடி தெரிந்தெடுத்தும்
கிரமப்படி பயிற்சி செய்தும் போலீஸ் கோஷ்டியில் சேர்க்காதது தான்.
குணக்கேடுள்ளவர்க ளெல்லாம் இம்மாதிரி அஜாக்கிரதையாய் நியமனம்
பெற்றவர்களேயொழிய வேறல்ல. இருந்தும் எல்லாரும் கெட்டநடத்தை

புள்ளவர்களா யிருக்கவில்லை, சிலர்தா னவ்விதமிருக்கிருர்கள். லார்ட் லான்ஸ்டௌன் காலத்தில் ஏற்படுத்திய மாதிரிகளில் இவ்வித குற்ற மேற்படுவதற்கிடமே இல்லை. புராதன போலீஸ் நிர்வாகிகள் படித்தறிந்தவர்களா யிராவிடினும் தேச நடையுடைபாவனைகளையும் தேச பாஷையையு மறிந்தவர்களா யிருந்ததால் கூடியவரையில் குறைவன்றியில் வேலையைநடத்திக் கொண்டு வந்தார்கள். அவர்களில் சிலரும் அனுஷ்டானத்தில் தகுந்த நிர்வாக யோக்கியதை யுள்ளவர்களாகவே யிருந்தார்கள். வேலைகளிலும் மெத்த திறமையை காண்பித்து வந்தார்கள். சுவதேசிகள் ஐரோப்பியர்கள் இருஇனசு உத்தியோகஸ்தர்களும் வேலைக்குத்தக்கபடி யல்லாததும் மனக் கவலை, ஊக்கம், உலக விஷயங்களை நுட்பமா யறிய வேண்டிய சாமர்த்தியம் முதலியவைகளுக்குத் தக்க சம்பளம் ஏற்பட் டிராததால் சீர்திருத்தம் செய்யவேண்டிய தவசியமாயிருந்தும் தாமதப்பட்டுக்கொண்டே வந்தது.

கமிஷனின் ரிபோர்ட்டில் இரண்டாவது அத்தியாயத்தி லுள்ள போலீஸ் நடவடிக்கைப் பிசகைப் பற்றிச் சொல்லி யிருப்பதெல்லாம் வாஸ்தவமா யிருந்தாலும் சில சந்தர்ப்பங்களிலும், சில காலத்திலும், சில மனிதர்களை யுத்தேசித்தும் வாஸ்தவமா யிருக்கக்கூடும். எல்லாரு மவ்விதமிருக்க இடமில்லை. எல்லாரும் எல்லாசந்தர்ப்பங்களிலும் எல்லாசமயங்களிலும் குற்றமான குணமுள்ளவர்களென்று சொல்வது கிரமமாகாது. ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தங்களுக்கு தெரிந்தவிஷயங்களை வைத்து கமிஷனர்கள் எல்லா இடங்களுக்கும் ஒரேமாதிரியாகவே ஒரு பொதுவான அபிப்பிராயத்தை யடைந்து உள்ளதை ஜாஸ்திப்படுத்தி யிருக்கிறதுபோல வெளியிலுள்ளவர்களுக்குத் தோன்றும்படி எழுதியிருக்கிருர்களென்று கவர்னர் ஜெனரல் அவர்களுடைய கருத்து. சுவதேசசாக்ஷிகள் தமக்கு சங்கடம் நேருங்கால் உள்ளவிஷயத்தை அதிகப்படுத்திச் சொல்லக்கூடியவர்களென்றும் ஐரோப்பாவிலும் [illegible] இறவிதமாய் இத்தேசத்திலும் உத்தியோகஸ்தர்கள் ஆபீசுள்ள நகரைவிட்டு வெளியூருக்குச் சென்றால் லஞ்சமென்று நினைக்காமலே அவர்களுடைய செலவுக்கு சாமானும் பணமும் கொடுக்கிறது வழக்கமென்றும் கமிஷன் உத்தேசிக்கவில்லை. இப்படி கொடுக்கிறதும் பெற்றுக்கொள்ளுகிறதும் பிரியத்தைக் காரணமாகக் கொண்டு இன்னும் இந்தியாவில் நடந்துவருகிறது. கிரமமாயிருக்கிற வரையிலும் யாதொரு பாதகமுமில்லை. கிரமம் தவறி ஜாஸ்தியாக ரூபாயைக்கொடுக்கிறதும் வாங்கிக்கொள்வதும் கெடுதியிளைவிக்கக்கூடியதே



தான், எங்கு உத்தியோகஸ்தர்கள் குறைந்த திறமையுள்ளவர்களாயிருக்கிருர்களோ எங்கு அவர்களுடைய நடத்தை தவறியிருக்கிறதோ அந்தவிடங்களில் நடத்தைக்குத் தக்கபடியே வேலையும் நடந்துவருகிறது. இதர இலாகாக்களிலுள்ள இதே அந்தஸ்தைப்பெற்ற தாழ்ந்த உத்தியோகஸ்தர்களைவிட போலீஸ்காரர்கள் சீர்குலைந்துதானிருக்கிருர்கள். ஏனென்ருல் அவர்களுடைய அதிகாரதோரணையின் பலத்தினுலும் சந்தர்ப்பங்கள் நேரும் காரணத்தினுலும் அவ்விதம் உண்டாகிறது.

கமிஷனர்களுடைய ரிபோர்ட்டின் இரண்டாவது அத்தியாயத்தின் சுருக்கும் ஜனங்களுடைய பொது அபிப்பிராயமாயிருந்தாலும் [illegible] காமல் சிலர்கொடுத்த அபிப்பிராய தோஷத்தினுலுண்டான முடிவுள்ளதாயிருந்தாலும் அதைபிரசித்தம்செய்ய கவர்னர் ஜெனரல் அவர்களுடைய மனதில் எவ்வித ஆசை பண்பு முண்டாக வில்லை. கமிஷனர்கள் வெளிப் படையாய் காட்டிக் கொடுத்து அவமானப்படுகிற கோஷ்டி சுவதேச கோஷ்டிதான். அந்த சுவதேசகோஷ்டியின் குறைவுகளையும் குற்றங்களையும் சுவதேசிகளே கண்டனம் செய்கிருர்கள். இவ்விதமாய் கமிஷனர்கள் வர்ணித்திருப்பதையிட்டே சுவதேசிகளாகிற கருவிகளை வைத்து இந்தியாவை யாளுவது கஷ்டமென்றுநினைக்கக் கூடியதாயிருக்கிறது. இருந்தபோதிலும் 1855-ம் வருஷத்தில் போலீஸ் அக்கிரமங்களைப் பற்றி விசாரணை நடத்தி எழுதப்பட்டிருக்கிற கமிஷன் ரிபோர்ட்டில் சொல்லி யிருக்கிற அட்டூழியங்களை நோக்குங்கால் நாளது நிலைமையை ரொம்ப விருத்தியை யடைந்ததாகவே சொல்லவேண்டும். கமிஷனர்கள் எந்த ஜாதியபிமானத்தை வைத்தாவது எவ்விதத்தாக்ஷண்யத்தை வைத்தாவது அபிப்பிராயப்பட்டிருக்கிருர்களென்று சொல்வதற்கிடமில்லை. ஏனென்ருல் ஒரு ஜாதியாரைமாத்திரம் அவர்கள் தூஷிக்கவில்லை. மேலும் அவர்கள் ஏற்படுத்துகிற செலவு தொகைஞாயமானது. அதில் ஒன்றுவீதம் இந்துக்களுக்கும் இங்கிலீஷ்காரர்களுக்கும் சேரக்கூடியது. கமிஷனர்கள் வர்ணிக்கிறபடி இங்கிலாந்தில் ஸர் ராபர்ட் பீல் சீர் திருத்தங்களை ஏற்படுத்தியகாலத்தில் அந்ததேசபோலீஸ் ஆக்ஷேபணைக்குள்ளாகி எவ்விதநடவடிக்கை யுள்ளதாக விருந்ததோ அவ்விதமாகவே இத்தேசத்து போலீசும் இக்காலத்திலிருப்பதாகவே தோன்றுகிறது. ஆனல் இத்தேசசந்தர்ப்பங்களுக்கும் அந்த தேச சந்தர்ப்பங்களுக்கும் பேதமுண்டென்று ஒப்புக்கொள்ளவேணும்.

## காணிஸ்டேபில்களை ஒழுங்காய் வைக்கவேண்டும்.

இராணுவமானது ஒவ்வொருவனுடைய திராணி எவ்வளவு இருக்குமோ அப்படியே அதன் பலமுமிருக்கும். அதுபோலவே போலீஸ்

கானிஸ்டேபில்கள் எப்படி இருக்கிறார்களோ அப்படியே போலீசுமிருக்கும். ஒழுங்கில்லாதவும், நன்றாய்ப் பழகாதவுமுள்ள யுத்தவீரர்கள் சைன்னியத்தை பலமுள்ளதாக்கமாட்டார்கள். அதுபோலவே அறிவில்லாமையும், சோம்பேறித்தனமும், கவலையற்றவர்களுமான போலீசார் போலீசை நல்லதாகசெய்யார்கள். ஆகையால் கானிஸ்டேபில்களை சரியான ஒழுங்கில் வைக்கவேண்டும். அப்படி வைப்பதற்கு அவர்களுக்குமேலிருக்கும் உத்தியோகஸ்தர்களே புதிதாய் வரப்போகிற ஒழுங்கில் கானிஸ்டேபில்களுக்கு சாவகாசம் அதிகமாய் ஏற்படும். இப்பொழுது ஏட்போலிஸ் திரிந்துவிட்டபடியால் அந்த சாவகாச காலங்களை உபயோகமுள்ள வேலைகளை செய்யச்சொல்லலாம். அவர்கள் தங்களை விருத்திசெய்து கொள்வார்கள் என்பதை நாம் எதிர்பார்க்கவேண்டாம். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எப்பொழுதும் சர்க்கார் மனுஷ்யர்களானபடியால் அவர்களுக்கு சாவகாசமிருக்கிற காலங்களில் கீழ் ஜனங்களோடு சேரவிடாதபடி எப்பொழுதும் உபயோகமுள்ள வேலைகளை செய்துகொண்டு சுறுசுறுப்புள்ளவர்களாகச் செய்விக்கவேண்டும். அவர்களை எப்படி கற்பிக்கிறது? போலீஸ் சட்டங்களை அவர்களுக்கு உபதேசிப்பது சாத்தியமானதல்ல. சட்டங்களும், செக்ஷன்களும் கடினமானபடியால், அவைகளை அவர்கள் படிக்க விரும்பமாட்டார்கள். இந்தியன் பினல்கோட்டிலுள்ள பிரிவுகளை தேடிப்பிடித்தலும் பழைய குற்றவாளிகளினுடைய அடையாளங்களைப் பாடம் செய்வதும், லேசான விஷயமல்ல. குற்றத்தினுடைய மூலாதாரத்தை அறியாத கானிஸ்டேபில்கள் அனேகரை நாம் பார்த்திருக்கிறோம். அவர்களைக் கற்பிக்கும் விஷயமானது அவர்களுக்கு அதில் ஒருவிதமான ஆவலுண்டாகும்படி கற்பிக்கவேண்டும். இந்தவிஷயத்தைப்பற்றி மேல் உத்தியோகஸ்தர்கள் யோசனைசெய்து செய்யவேண்டும். ஹெட் கானிஸ்டேபில் சுறுசுறுப்பாயிருந்தால், இந்த வேலைகள் சரியாய் நடக்கும். அனேகமான பொருள்பட்டங்களை அவர்களுக்குச் சொல்லி, அதன் வழியாகவே சட்டங்களைத் தெரிந்துகொள்ளும்படி செய்வதே சுருக்கவிஷயம். உத்தேசமான கேஸ்களையும், அதைப்போன்ற கேசுகளையும் அவர்களுக்குக் கற்பித்தால், தாங்களே சட்டங்களை அறிந்துகொள்வார்கள். அதிக கெட்டிக்காரத்தனத்தோடும் சாதுரியத்தோடும் கண்டு பிடிக்கப்பட்ட கேஸ்களையும் ஞானத்தை விருத்தி செய்கிற விஷயங்களையும், ஸ்டேஷனைச்சுற்றி இருக்கும் கேஸ்களைப்பற்றியும், எப்படிப்பட்ட குற்றஞ் செய்கிறார்களென்றும், கற்பித்தால் அவர்களுக்கு உபயோகமாயிருக்கும். குற்றவாளிகள் புறப்படுதலும், அவர்கள் போகும் வழியில் செய்யும் சாதுரிய வேலைகளும் அவர்களின் அக்கிரமங்களும் அவர்களுக்குக் கற்பிக்கும் விஷயமாம். கண்டு பிடிக்கப்படாத கேஸ்களைப் படாமல் படிப்பதுபோல் படியாமல், சாதுரியமாய் கண்டு பிடிக்கவேண்



டியவழிகளையும், விசாரிக்கவேண்டிய விதங்களையும் அவர்களுக்குக் கற்பித்தால் உபயோகமாயிருக்கும். போலீஸிலிருக்கும் ஒவ்வொரு உத்தியோகஸ்தருடைய ஞாபகமும், போலீஸை மேலான ஸ்திதிக்குக் கொண்டுவர வேண்டுமென்கிற எண்ணமுள்ளவர்களாயிருக்கவேண்டும். போலீஸ்மேலான ஸ்திதிக்குவர முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம், அவர்கள் எல்லாரும் ஒத்திருத்தலும், மேலானகாரியங்களுக்குக் கீழ்ப்படிதலும், குற்றங்களைக் கண்டு பிடித்தலும் குற்றங்கள் நடக்கவொட்டாமல் தடுத்தலும்தான். ஆனால் இவைகளை வாயினால் சொல்வது சுலபம், அப்படியே நடப்பது கஷ்டம் என்பது வாஸ்தவந்தான். பிராஞ்சு [illegible] விருத்தநெப்போலியன் என்பவர் ராணுவம் கெட்டதாயிருந்தால் அந்தத் தலைவனை தூக்கில் வாங்கவேண்டுமென்று சொல்வார். அதுபோலபோலீஸ் கெட்டதாயிருந்தால், அதற்கு மேலிருப்போர்கள்தான் ஜவாப்தாரிகளே யொழிய வேறொருவருமில்லை. பக்தியுள்ள மேலதிகாரிகளால்தான் எல்லாம் ஆகவேண்டும். கெட்டவர்களின் கீழிருப்போர் துர்மார்க்கர்களாகவோ அல்லது உபயோகமற்றவர்களாக இருப்பார்கள்.

ஓய்வுகாலங்களுக்கு வேலை. வேலையில்லாக் கை தினவெடுக்கும் என்பதுபோல் வேலையில்லாத கானிஸ்டேபில்கள் செய்யக்கூடிய உபத்திரவத்திற்கு யாதொருகணக்கே இல்லை. கானிஸ்டேபில் வேலை தீர்ந்துபோனவுடன் அவ்வேளைப் போலொத்த அல்லது அவனுடைய பழய சிநேகிதர்களோடு சேருகிறான். கள்ளுக்கடைமுதலிய ஆக்ஷேபமான இடங்களுக்குப் போகிறான். அவனுடைய தோழர்கள் சோம்பேறிகளும் பழயகுற்றவாளிகளுமே. தன்னினம் தன்னைச்சேரு மென்பதுபோல் அவனைப்போல்லாத்தவர்களுடன் தான் சேருவான். ஞாயமாய் ஊரில் கலகத்தைத் தடுக்கவேண்டியவன் இப்படிப்பட்டவர்களோடு சேர்ந்தால் அவன் என்னசெய்யக்கூடும். அவனையார் மதிப்பார்கள். கலகக்காரருக்கும் கானிஸ்டேபில்கள் தம்மைச்சேர்ந்தவர்கள் தானே. அவர்கள் நம்மை என்ன செய்வார்களென்கிற தைரியம். இப்படி இருந்தால் ஜனங்களுக்கு அவர்களால் என்னஉபயோகம். ஆகையால் வேலையை விட்டுப்போவோர்களைப்பற்றி ஜாக்கிரதையாய் பார்த்துக்கொள்ளவேண்டுமென்கிற சில சங்கதிகளை அதிகாரிகள் கவனிக்கவேண்டியது.

ரீடிங்ரூமும் அப்பியாசமும் ஏற்படுத்தவேண்டும். கானிஸ்டேபில்களை கீழ்ஜாதியாரோடு சேரவியாமல் தடுக்கி ஜனங்களுக்கு இவர்களிடம் நம்பிக்கை வரும்படி செய்ய ஏது நல்லவழி அதிகவேலையும் அதிக படிப்பும் அவர்களுக்கு இஷ்டமில்லை. லண்டன் நகர்த்தில் கானிஸ்டேபில்களுக்கும் மேல் உத்தியோகஸ்தர்களுக்கும் வேலையில்லாக் காலங்களில் ஏற்படுத்தி யிருக்கும் ஏற்பாடுகளை ஏறக்குறைய ஏற்படுத்துவது நலம்.

ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சேர்ந்தாற்போல் ஒரு ரீடிங்ரூமும் அப்பியாஸங்களுக்கு ஏற்பாடும் செய்யவேண்டும். இந்தியர்கள் இங்கிலீஷ்காரரைப்போல் படித்தவர்களல்ல. ஆனால் சர்க்கார், இப்படிப்பட்டவர்களுக்குத் தகுந்த படிப்பு வஸ்துக்கள் ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களுக்குத் தெரியும்படி சுயபாஷையில் சுலபமான நடையில் புஸ்தகங்களும், சஞ்சிகைகளும் ஏற்படுத்தவேண்டும். இதுவுமன்றி சுபாஷை சஞ்சிகைகள் ஏற்பட்டிருப்பதால் அவைகளையும் வரவழைத்து வைக்கவேண்டும். தவிர உள், வெளி அப்பியாஸங்களும் ஏற்படுத்தவேண்டும். சதுரங்க [illegible]ராதிய பலவகை விளையாட்டுகளும், பந்து முதலிய வெளி அப்பியாஸங்களும் ஏற்பாடு செய்யலாம். வேலையில்லாக்காலங்களை இம்மாதிரியாய்ச் சிலவழிப்பது கெட்டநடத்தையுள்ளவர்களோடு சேர்ந்து கெட்டுப்போவதைவிட மேலானது.

குற்றவாளிகளின் சீர்திருத்தம். ஜனங்களையும், ராஜாங்கத்தையும் பற்றிப்படிக்கும் கூட்டச் சபையில் சர் ஆலிவர் லாட்ஜ் என்பவர் சொன்ன சங்கதியை இங்கு எடுத்துச் சொல்லலாம். நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளவேண்டியது முக்கியம்தான். ஆனால் மற்றவருடைய ஊக்கத்தைக் குறைக்க நமக்கு அதிகாரமில்லை. இப்பொழுது சிறைச்சாலைகளில் கைதிகளை உபசரித்தலானது, அவர்களைக் கெடுக்கவேயொழிய தவறில்லை. அப்படிச் செய்வதனால் அவர்களை இன்னும் கிருதகர்களாக்குகிறதேயொழிய அவர்களை சீர்திருத்துகிறது கிடையாது. தப்புச் செய்தவர்களை பழிவாங்குவதாயிருக்கிறதேயொழிய வேறில்லை. அவர்கள் தப்புச் செய்வதை விடுவதில்லை." எப்படிப்பட்ட தப்புகள் செய்தாலும், அதற்கு விதிக்கவேண்டிய தண்டனையானது அதிகமாயிருக்கவேண்டும். அவர்களை நன்றாய் சீர்படுத்தக்கூடியவர்களின் கீழ்வைத்து சீர்திருத்தவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் நல்லஸ்திதிக்கு வருவார்கள். இப்பொழுது இருப்பதுபோல் சிறைச்சாலையில், [illegible] கண்கொடை சம்பளம் வாங்குவோர் தங்குமிடமாயிருக்கச்செய்யாமல் நல்ல கெட்டிக்காரரை வைத்து வேலைவாங்கிக்கொண்டு, கைதிகளை சீர்திருத்தினால், இனிமேல் அக்கிரமம் செய்யாமலிருப்பார்கள். இதைப் பற்றி சர்க்கார் யோசனை செய்வார்களென்று எதிர் பார்க்கிறோம்.

---

## சில கெட்டிக்காரத்தனமுள்ள வஞ்சகர்கள்.

நம்முடைய இந்துதேசமானது அநேக தர்மங்கள் அடங்கிய ஒரு தேசமாகச் சொல்லுகிறார்கள் மேலும் இந்துமதத்தைப்பற்றி பிரசங்கம் செய்யும் ஒருவன் இமயகிரி பர்வதமுதல் கன்னியாகுமரிவரையில் தன்னிடத்தில் ஒருகாசு கூட உதவியில்லாமல் பிரயாணம் செய்யக்



கூடுமென்று சொல்லுகிறான் இது உண்மையாகவே இருக்கலாம் ஏனென்றால் பிரயாணிகளுக்கு இரண்டொரு நாளைக்கு ஆதரிக்கும்படியான அநேக சத்திரங்களிருக்கின்றன. வழிப்பிரயாணி என்று வேஷம்பூண்ட அநேகம் சோம்பேரிகள் மறுநாளைப்பற்றி நினையாமலே இவ்விதமாக அலைந்து திரிகிறார்கள். இந்துக்களுடைய ஊரில் ஏழைஜனங்களுக்காக தனிய மடங்கள் இல்லையென்று கருவம் அடைகிறார்கள். அப்பேர்ப்பட்ட இடங்கள் இல்லாததற்கு காரணமென்னவென்றால் இத்தேசத்திலுள்ள பிரதி மனிதர்களின் தர்மசிந்தையே. ஒருவன் எவ்வளவு ஏழையாய் இருந்தபோதிலும் தன்னைவந்து யாசித்த ஒரு பிச்சைக்காரனுக்கு தன்னிடத்தில் ஒன்றும் இல்லையென்று சொல்லமாட்டான் இது நல்ல விஷயமாகவும் நல்ல புராணங்களில் எழுதக்கூடிய விஷயமாயிருந்தபோதிலும் சிலவிஷயங்களில் உண்மையாகவே இருக்கிறது. இப்பகுத்தறிவில்லாத தர்மமானது சோம்பேரிகளையும், தேகத்தில் வலிவுள்ளவர்களையும், வியாதியற்றவர்களையும் இச்சகம் பாடுகிறவர்களையும் போஷிக்கும்படியாய் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு ஆகாரமானது சுலபமாய் கிடைக்கக்கூடாத காலத்தில் அதை அடையவேண்டியதைப் பற்றி எவ்விதமான பாசாங்குகளைச் செய்தாவது சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். பூர்வீகமான இந்துபுராணங்களில் ஒவ்வொரு குடும்பத்தின்தலைமையானவனும் தான் சாப்பாட்டுக்கு போகுமுன் வெளியேபோய் ஒரு அதிதியை தேடிக்கொண்டு வந்து இவன் தான் உண்ணும் காலத்தில் கூட வைத்துக்கொண்டு போஜனம் பண்ண விதித்திருக்கிறது.

இது ஒரு பெருந்தன்மையான கட்டளையே. ஆனால் இது பெரும்பான்மையாய் வருந்திக் கேட்டுக்கொள்ளாத நடவடிக்கை. இது அடையத்தகாத சில சோம்பேரிகளின் நிமித்தமாகவே புண்டாயிருக்கிறது. சுயாதீனம், சுயநம்பிக்கை, பிறர் உதவியை எதிர்பாராமை வேலைசெய்வதினால் உண்டாகும் மேன்மையைப்பற்றி நினைத்தல் ஆகிய இவைகள், ஒரு சாதியில் மேன்மையடைய முக்கிய குறிகளாயிருந்தபோதிலும், மேற்சொல்லிய விஷயங்கள் குறைவாயிருத்தலானது; பூர்வீகத்தில் ஏற்பட்ட காரணங்களும் சித்தாந்தங்களும்போய்விட்டன என்று கவனியாமலே ஏற்பட்டிருக்கும் சாஸ்திர விதிப்படி நடந்துகொள்வதே காரணமாகவிருக்கின்றது. இதற்கு உதாரணமாக, பூர்வீகத்திலேற்பட்ட பிரகாரம் படிப்பை விருத்திபண்ணுவதற்கும், ஆத்மார்த்தமாக விருத்தி செய்வதற்கும் ஒரு சாதியார் தேவையாக இருந்தது அவர்களுக்கு வேறு வேலைக்கு இடமில்லாமலே அவர் சாப்பாடு முதலிய இதர இருத்தியங்களுக்கு வேண்டியவைகளை செய்துவைக்கவேண்டியதாயிருந்தது. ஆனால் இக்காலத்தில் அப்படிப்பட்ட அம்சங்கள் போய்விட்டன சித்தாந்தமோ அப்படியே இருக்கிறது. அதன்படி நடத்தல் அனேகமான சோம்பேரி

களுக்கும், குற்றவாளிகளுக்கும், வஞ்சகர்களுக்கும் இடம் கொடுக்கிறது. மேற்கு தேசங்களில் நடக்கும் தர்மத்திற்கும், கீழ்நாடுகளில் நடக்கும் தர்மங்களுக்கும் வெகுவாய் வித்தியாசம் இருக்கின்றன. ஏனென்றால் அவ்விடங்களில் தர்மமானது ஒரு கூட்டத்தாரைப் பொருந்தியதாயிருக்கின்றது. இவ்விடங்களிலோ பிரதி மனிதனையும் பொருந்தியதாயிருக்கிறது.

ஒரு பிச்சைக்காரன் நம்மிட தேசத்தனுடைய ஒருவனிடத்தில் பரிதாபமாய் வேண்டிக்கொண்டால் உடனே அவனது மனம் இரங்கி அவனுக்குத் தன்னாலான உதவியைச்செய்வான். அவன் சொல்லும் குறைகள் நிசமா அல்லது பொய்யா என்று ஆலோசிக்கிறதில்லை. இவ்விதமாய் எளியவர்களிடத்திலும், செல்வவான்களிடத்திலும், பொய் பேசி வஞ்சகம் செய்யும்படியான அநேகமானவஞ்சகர்களுக்கு இடம் கொடுக்கிறது. பிரதிமாதங்களிலும் அனேகர்உதவிக்காக, தங்களுக்கு விசேஷமான ஆபத்துகள் நேரிட்டதென்றும், இன்னும் இவ்விதமான அனேக குறைகளைச் சொல்லிக்கொண்டு நம்மிடத்தில் தொந்திரவு செய்துக்கொண்டு அலைந்து திரிகிறார்கள். ஒருவன் தன்னுடைய வஸ்திரங்கள் முதலானவைகளை ரெயில் மார்க்கத்தில் இழந்து விட்டதாகவும் மற்றொருவன் திருடர்களிடத்தில் அகப்பட்டு நன்றாய்ப் புடையுண்டு தன்னிடத்தில் இருந்தவைகளையெல்லாம் இழந்துவிட்டதாகவும், மூன்றாமவன் தான் நெடுநாளாக வியாதியாயிருந்து ஆஸ்பத்திரியில் நெடுநாளாக வைத்தியம் செய்து கொண்டதினால் உதவியற்றவனாக இருப்பதாகவும், நான்காமவன் ஒருவன் தான் கவர்மெண்டு வேலையிலிருந்து யாதொரு தப்புமில்லாமல் தன்னைத் தள்ளி விட்டதாகவும் அதனால் தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் வருந்துகிறதாகவும் இம்மாதிரியான பலவிதமான குறைகளைச் சொல்லிக்கொண்டு அநேகர் திரிகிறார்கள். கடைசியாக ஒரு சன்னியாசியானவன் தான் கோவிலைக்கட்டுவிப்பதாகவும், அல்லது ஒரு வைதிகச் சடங்கை நடத்தவேண்டுமென்றும் அல்லது அனேகம் பிராமணர்களுக்கு அன்னமிடவேண்டுமென்றும், இவ்விதமான மார்க்கங்களை தங்களுக்குப் பிழைப்புக்கு இடமாக வைத்துக்கொண்டு வெளிகிளம்புகிறார்கள். இவைகள் இப்படியிருக்க இக்காலத்தில் மிகவும்பலித்து வருகிற ஒருவிதமான தந்திரமாவது சிலர் வீட்டில் பிள்ளையோ அல்லது தகப்பனோ இறந்துவிட்டதாகவும், அவனுடைய கிரியை நிறைவேற்ற ஆதரவு இல்லாமல் இருப்பதாகவும் அதற்காக கொஞ்சம் திரவிய சகாயம்வேண்டுமென்றும் வீடுவீடாய் யாசிக்கிறார்கள். உண்மையாகவே இவ்விதமான அனேகம் வஞ்சகர் உளர். இப்படிப்பட்டவர்கள் சில கேள்விகளுக்கு விடை கொடுக்கமாட்டார்கள் என்பதை நாம் நிச்ச



மாய் எண்ணலாம். ஆனால் நம்மதேசத்தவர்கள் சீக்கிரத்தில் அவனுடைய குறைகளினால் மனமிரங்கித் தாங்கள் சத்காரியத்தில் செலவழிப்பதாக நினைத்து தங்களால் கூடியதை உதவுகிறார்கள். இவ்வர்த்தமானம் எழுதும் ஒருவர் சிலநாளைக்குமுன் மத்தியமாகாணங்களின் வாசியாகிய ஒருவனைத் தான் சென்னப்பட்டணத்தில் கண்டதாகவும், அவன் இராமேசுவரத்திலிருந்து திரும்பிவரும் காலையில் தன்னிடத்தில் உள்ளவைகளை இழந்துவிட்டதாகவும் தனக்கு உதவிசெய்யவேண்டுமென்று கேட்டதாகவும் சொன்னார்.

அவன் தான் சொல்வதை நிசமென்று நம்பும்படியாக ஒரு டப்மாஜிஸ்திரேட் குடுத்த சர்ட்டிபிகேட் வைத்திருந்தான். இதேமனிதன் மூன்று வருஷங்களுக்கு முந்தி இவ்வர்த்தமானி எழுதுபவராலேயே மேற்சொன்ன சர்ட்டிபிகேட்டின் நம்பிக்கையினாலே உதவிபெற்றவன். அதனாலேயே இப்பொழுது அவன் காண்பித்த சர்ட்டிபிகேட்டானது தப்புகையெழுத்துள்ளது. இவ்வர்த்தமானம் எழுதுபவர் முன்பு இவனைப்பற்றி மூன்று வருஷங்களுக்குமுன் இராமேசுவரம்கோர்ட்டு வக்கீல்களுக்கும் ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜிக்கும் விசாரணை செய்திருப்பதினால் அவன் தான் இம்மனிதனென்று சொல்லுங்காலையில் அவன் உடனே ஓட்டம் பிடித்தான்.

தற்காலத்தில் உண்டாயிருக்கும் மற்றொரு விதமான வஞ்சகர்கள் அவர்கள் ரெயில்வே ரசீதுகளைக்கொண்டு வியாபாரம் செய்கிறார்கள். ஒருவன் நல்ல உடுப்புகளோடு ஒரு வியாபாரியினிடத்தில் ஒரு ரெயில்வே ரசீதைக் காண்பித்து தான் இரண்டொரு சாமான்களை பட்டணத்தில் விற்பனைக்காக போட்டிருப்பதாகவும் இன்னும் விசேஷமாய் அதே சாமான்கள் வரப்போகிறதினால் நயமாய் கொடுப்பதாகவும் சொல்வதின்பேரில் அவ்வியாபாரியானவன் தனக்குக் கிடைக்கப்போகும் இலாபத்திற்காக மிகவும் சந்தோஷத்தோடு அச்சாரமாக அந்த ரசீதைப் பெற்றுக்கொண்டு மேற்படி சாமான்களுக்காக முந்திப் பணம் கொடுக்கிறான். அவன் அதைப்பெற்றுக்கொண்டு மறுபடியும் அகப்படுகிறதேயில்லை. கடைசியாக அந்த இரசீது தப்புகையெழுத்துள்ளதென்று அப்புறம் தெரிந்துகொள்கிறான். மற்றொரு புறதேசத்துப் பிராமணன் இவனுடைய வஞ்சகமான நடத்தையானது சொல்லிமுடியாது. இவனிடத்தில் மோசம்போனவர்கள் அநேகர். சிலரிடத்தில் தான் ஏதோ ஒரு விஷயத்தின்பொருட்டு யாத்திரையாக பெண்டு பிள்ளைகள் சகிதமாய் புறப்பட்டதாயும் வழியில் விதிவசமாய் பெண்டுபிள்ளைகளையும் தன்னிடத்தில் உள்ள திரவியத்தையும் இழந்துவிட்டதாகவும் சொல்லிக் கொள்வான். மற்று சிலரிடத்தில் தான் ரெயில்வேயில் பெரிய உத்தி

142385

யோகஸ்தன் என்றும், தான் ரசாவின்பேரில் இருப்பதாயும் தன்னிடத்தில் அனேகம் வேலைகள் உள்ளனவென்றும் சொல்லி மோசம் செய்து வேண்டிய பணத்தை கடனாக வாங்கிக்கொண்டு ஏமாற்றிவிட்டான். இம்மாதிரி நம்பிக்கைவைத்த அனேகம் வக்கீல்கள், வியாபாரிகள், உத்தியோகத்திற்காக அலைந்து திரிகிறவர்கள், இவர்கள் முதலானவர்கள் இவனிடத்தில் ஏமாந்தவர்கள். இப்படிப்பட்ட வஞ்சகர்களை கொஞ்சம் பரீக்ஷித்தாலும் அல்லது கொஞ்சம் அவர்கள் நடை உடைபாவனைகளைப் பற்றி ஆலோசனை செய்தாலும் ஜனங்கள் அவர்களுடைய வலையில் சிக்கிக்கொள்ளார்கள். இவைகளைக்காட்டிலும் நம்மிட தேசத்தவர்கள் வஞ்சகர்களுடைய கபட பாசங்களுக்கு ஏமாராமல், தர்மத்தை விவேகமாய் நடத்தவேண்டியதுதான்.

---

## கான்ஸ்டபல் வேலையிலிருந்து போலீஸ் அஸிஸ்டாண்டு உத்தியோக பதவியையடைந்த எம். அப்துல்சுபாஹான் சாகிப்கான்பஹதூர் என்பவரின் சரித்திரம்.

இவ் வப்துல்சுபாஹான்சாஹிப் படிப்பில் விசேஷமான பாண்டித்தியம் இல்லாமற்போனபோதிலும் போலீஸ் உத்தியோகத்தில் அதிகத் திறமையோடு [illegible] ததினால் அவர்காலமான பிற்பாடுகூட அவருடையபெயர் எங்கும்பரவி [illegible]ட்டிருக்கிறது. இவர் நல்ல வம்சத்தில் பிறந்தவர். இவர் இருபது வயதிற்குள்ளே போலீஸில் ஒரு உத்தியோகத்தை அடைந்தார்.

இவர் 1866-ம் வருஷத்தில் இரண்டாவது வகுப்புச் சேவகனாக சென்னை போலீஸில் நியமிக்கப்பட்டார். இவ்விடத்தில் கைதிகளைக்கண்டுபிடிப்பதில் கெட்டிக்காரர் என்கிறபெயரை அடைந்தார். இவ்விடமிருந்து கோயமுத்தூருக்கும், கடைசியாக மதுரைஜில்லாவிற்கு மாற்றப்பட்டார். இவ்விடத்தில் தன்வேலையை மிகவும் ஊக்கத்தோடு பார்த்துவந்தார். இம்மதுரை கள்ளர் சாதியாரால் மிகவும் தொந்திரவு அடைந்த இடமாதலால் இவருடைய உத்தியோகத்தின் திறமையால் அவர்களைக் கண்டுபிடித்து அடக்கினதால் இவருக்கு நல்லபெயர் கிடைத்தது. இரண்டுவருஷத்திற்குள் கர்னல், என். டெல்கர் இவருடைய வேலையின் திறமைக்கும், இவரால் நாட்டில்உண்டான ஒழுங்கிற்கும் மெச்சி இவருக்கு ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் வேலைகொடுத்தார். இன்னும் மூன்று வருஷத்திற்குள் இவருக்கு இவருடைய வேலையின்திறமைக்காக போலீஸ் இனிஸ்பெக்டர்வேலை கொடுத்து இப்பவும் கள்ளர் ஜாதியாருக்குப் பிரசித்தி



பெற்றுள்ள உசிலாம்பட்டி டிவிஷனுக்கு மாற்றிவிட்டார்கள். 1878 - ம் வருஷத்தில் மறுபடியும் மதுரைக்கு மாற்றி அவ்விடத்தில் அவரை இருபத்திமூன்றுவருடம் போலீஸ் இனிஸ்பெக்டர்வேலையிலே வைத்துவைத்தார்கள். இவர் இவ்விடத்தில் சனங்களாலும், இவருடைய மேல் உத்தியோகஸ்தர்களாலும் மிகவும் கொண்டாடப்பட்டார். இவர் பார்வைக்கு ஆஜானுபாகுவாயும், கம்பீரமாகவும் இருப்பார். அக்கள்ளஜாதியாருக்கு இவரேதகுந்தவர் என்றும் பெயர்கொடுத்தார் சிலவருஷங்களுக்குமுன் கள்ளழகர் சன்னதியிலிருந்த செல்வத்தை காபூல்துலுக்கர் கொள்ளைகொண்டுபோனார்கள் அக்காபூலாருக்கு எஜமானன் திருச்சிராப்பள்ளியில் பெயர்பெற்ற லாலா என்பவன் இத்தக்கொள்ளையை வெகுநாளாக ஒருவராலேயும் கண்டுபிடிக்க முடியவில்லை கடைசியாக அப்துல்சுபாஹான் மிகவும் கெட்டிக்காரத்தனமாய் கண்டுபிடித்தார் இக்காபூலாரை நகைகளுடனே கண்டுபிடித்தவுடனே கோவில் அதிகாரிகளுக்கு மிகவும் சந்தோஷமுண்டாகி மேற்படி அப்துல்சுபாஹாம் சாஹிப் அவருக்கு கவரன்மெண்டாரின் உத்திரவின்பேரில் ஒரு விலையுயர்ந்த பொன் கடியாரமும், ஒரு பதக்கமும் வெகுமானமாகக் கொடுத்தார். இவ்விதமான அனேகம் திருடுகளைக் கண்டுபிடித்திருக்கிறார். இத்தத்திறமையே இவருக்கு முழுமைக்கும் உதவியாகிவந்தது. இவர் கன்னியாகுமாரியிலுள்ள ஒரு கோயில் கொள்ளையில் பம்பாய் இராஜதானியாருக்கு வெகு உதவிபுரிந்திருக்கிறார். இவ்விஷயமாக இவர் அனேகம் பட்டணங்களையும், இராஜதானிகளையும் போய் பார்த்துவந்திருக்கிறார். ஒருகாலத்தில் கவர்மெண்டு உத்தியோகஸ்தராகிய மிஸ்டர். பூகஸ்லென்பவர் கொடைக்கானலுக்கு போகும்வழியில் திருடர்களால் அடியுண்டு தன்னிடத்திலுள்ள அதிகமான திரவியத்தையும் கடியாரத்தையும் இழந்தார், இக்குற்றவாளிகளையும் மிஸ்டர். அப்துல்சுபாகான் சாகிப்பு மிகவும் கெட்டிக்காரத்தனமாய் கண்டுபிடித்து சிக்ஷித்துவைத்தார்.

இக்காலத்தில்தான் அனேகயிடங்களில் தீவட்டிக் கொள்ளைகள் நடந்துவந்தன இவைகளை அடக்கும் நிமித்தம் மிஸ்டர். பாலெட்டுகாலத்தில் மதுரை யினிஸ்பெக்டராயிருந்த அப்துல்சுபாகான் சாயப்புயென்பவரை ஸ்பெஷலாக இக்கொள்ளை யடக்குவதற்கு யினிஸ்பெக்ட்டராக நியமித்தார். இவர் மிகவும் ஊக்கத்தோடு வேலைசெய்து கொள்ளைக்காரர்களையெல்லாம் ஒழித்தார் இவருடைய வெளிப்பகட்டான வேலைக்காக இந்தியாவின் கவர்னெர் ஜெனரல்ஆகிய லார்ட்லான்ஸ்டவுன் என்பவரின் உத்தரவின்பேரில் அப்துல்சுபாஹான் என்பவருக்கு கான்பகதூர் என்னும் பட்டத்தை கொடுத்தார் கடைசியாக அவர் மதுரை டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டராகி இருக்குங்காலையில் அம்மையப்பாக்கத்தாருக்கும் திண்டுகல்தாலூக்காவைச்சேர்ந்த கள்ளர்களுக்கும்உண்டான

கலகத்தை அடக்குவதற்காக போகவேண்டி நேரிட்டது இந்தசண்டையை இவர் நீக்கினதனால் இவருடைய கீர்த்தியானது மிகவும் விருத்தியடைந்து மேலும் 1899-வருஷத்தில்நடந்த சிவகாசிகலகத்தில் அப்துல் சுபாஹான் சாகிப்செய்த ஊழியத்திற்காக திருநெல்வேலி டிஸ்டிரிக்டுக்கு 1901-வருஷத்தில் அஸிஸ்டெண்ட் சூபரின்டென்டெண்ட் ஆக நியமிக்கப்பட்டு இரண்டரை வருஷகாலம் வேலைபார்த்தபிற்பாடு நெல்லூருக்கு ஆக்டிங் அஸிஸ்டெண்ட் சூபெரின்டென்டெண்டாக மாற்றப்பட்டார் இவர் 37-வருஷகாலம் இப்போலீஸில் ஊழியம்செய்த காலத்தில் ஆறுமாதகாலந்தான் ரஜாவாங்கிக்கொண்டார் இதை தற்காலத்து உத்தியோகஸ்தர் எல்லோரும் அவசியம் கவனிக்கவேண்டியது. இம்மாதிரியாக நடப்பதுதான் கவர்மெண்டு உத்தியோகத்தில் விருத்தியடைவதற்கு முக்கியகாரணம் மேற்சொன்ன அப்துல் சுபாஹான் சாகிப்தான் கவர்மெண்டில் ஊழியம்செய்த காலம்வரையில் தன்மேல் யாதொரு தப்புமில்லாமல்படிக்கி ஜாக்கிரதையாக இருந்து கடைசியில் பென்ஷன் வாங்கிக்கொண்டார்.

---

## தென்னிந்தியாவின் குற்றவாளிகளின் சரித்திரம்.

குற்றவாளிகளின் பெயர்பதிப்புள்ள ரிஜஸ்தர்களிலிருந்து குற்றவாளிகள் சகலஜாதிகளிலுமிருப்பதை அறிந்துக்கொள்ளலாம். ஆகையினால் இந்துக்களுக்குள் யெச்சாதியார் குற்றவாளிகள் யென்பதை விவரித்துச் சொல்லவும் இந்துதேசத்திலுள்ள ஜாதிகளுக்குள் ஒருஜாதியை குற்றமற்றது யென்று ஸ்தாபிக்கவும் கூடாததாயிருக்கின்றது. மிகவும் தாழ்ந்த ஜாதி ஜனங்களிடத்தில் ஸன்மார்க்கத்தில் நடக்கும் தன்மையானது உண்டென்பதையும் மிகவும் உயர்ந்த ஸ்திதியிலுள்ளவர்களிடத்தில் தங்களுடைய குலத்தையும் அவர்களின் அந்தஸ்தையும் நினையாமலே துன்மார்க்கமான காரியங்களும் திருட்டு பொய் பிரட்டுமுதலானவைகளுண்டென்பதும் நமக்குத் தெரிந்த விஷயமே. மேற்சொன்ன இவ்விரண்டு விஷயங்களிலேயும் ஒவ்வொன்றையும் நன்றாய் யெடுத்துக்காட்டினாலொழிய ஜனங்கள் உயர்குலத்திலும் நல்ல அந்தஸ்திலும் பிறந்த ஒருவன்செய்த குற்றத்தை ஒப்புக்கொள்ளார்கள். ஆகையால் குற்றவாளிகள் யெல்லாரையும் விவரித்துச்சொல்ல நம்மால்முடியாது. ஆகையால் அவர்களை வம்சபரம்பரையாக குற்றம்செய்பவர்களை குற்றவாளிவம்சமென்றும் அப்படியாயும் பிரியமில்லாமல் தன் சொந்தநடவடிக்கைகளால் குற்றவாளியானவர்களை குற்றவாளிகளென்று இரண்டு வகுப்பாக வரித்துக்கொள்வோம். குற்றவாளிகளின் வம்சங்களில் அநேகர் குற்றவாளிகளாகவும் சிலர் குற்றத்திற்கு ஏதுவான சந்தேகத்திற்கு இடமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் தாங்கள்வசிக்கும் நாடுகளிலேயும் சிலர்



வெளியூருகளிலேயும் கொள்ளையிட்டுவருகிறார்கள் வெளியூருகளில் சென்று கொள்ளையடிக்கும் திருடர்கள் வீடுவாசல்களில்லாமல் அவர்கள் தங்கும் இடங்களில் கொள்ளையடித்துஅலைந்து திரிவார்கள்.

---

## சென்னை ராஜதானியிலுள்ள திருடர்களின் கூட்டமும் அவர்களின் சரித்திரமும்.

1. அளகிரிகள் இவர்கள் தங்களுடைய கூட்டங்களோடு சென்னை ராஜதானியில் அநேக இடங்களில் வசிக்கிறார்கள் இவர்கள் கங்கைநதிக்குத்தெற்கேயுள்ள தேசங்களிலேயும்சந்தைகள்கூடும் இடங்களிலேயும் ரயில் மார்க்கங்களிலேயும் கொள்ளையடிக்கிறார்கள் இவர்களில் சிலர் வங்காளம், மத்தியமாகாணங்கள் முதலிய இடங்களில் குடியேறி யிருக்கிறார்கள் சென்னை ராஜதானியில் திரிச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, செங்கல்பட்டு, கடப்பை, நெல்லூர், அனந்தபுரம், கர்நூல், பல்லாரி, கிருஷ்ணா, கோதாவரி, விசாகப்பட்டணங்களிலேயும் மைசூரிலும் தென் இந்தியாவிலுள்ள பிராஞ்சியகாடுகளிலும் வசிக்கிறார்கள்.

2. பம்பாய் ராஜதானியிலுள்ள பாம்ட்டாஸ் என்னும் ஜாதியார் சென்னை ராஜதானியில் செய்த கொள்ளைகளுக்காக மிகவும் பிரசித்திபெற்றவர்களாய் இருக்கிறார்கள் அவர்கள் இந்தியாவில் அநேக இடங்களில் கொள்ளையடிக்கிறார்கள் அவர்கள் முக்கியமாய் யாத்திரைவாசிகளை வழிபறிப்பதுண்டு.

3. கடப்பை ஜில்லாவிலுள்ள பட்ராஸ் என்னும் ஜாதியார் அதிகதூரம் வெளிநாட்களில்சென்று கொள்ளையடிப்பார்கள்.

4. குறவர்கள் எறுக்கர்கள் என்று சொல்லப்பட்ட இவர்கள் வடஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, நெல்லூர், மத்தியமாகாணங்கள், குண்டூர், கிருஷ்ணா, கோதாவரி, சேலம், முதலியஇடங்களில் வசிக்கிறார்கள் அவர்கள் இன்னும் மைசூர் நிஜாம் ராஜதானிமுதலிய இடங்களில் வசிக்கிறார்கள். இவர்களுக்கு விசேஷ மாகமாறு பெயர் உண்டு இவர்கள் அதிகவேகமாய் நடக்கக்கூடியவர்கள் அதனால் அவர்கள் தங்களைக் கண்டுபிடிக்காதபடி ஒன்றுசேர சாத்தியமாகின்றது.

5. ஜோகிகள் இவர்கள் வடஆற்காடு, தென்ஆற்காடு, செங்கல்பட்டு முதலிய இடங்களிலும் நெல்லூர், கடப்பை, சேலம் முதலிய ஜில்லாக்களின் சிலஇடங்களிலும் கொள்ளையடித்து ஜனங்களுக்கு அதிக பயத்தையும் உண்டாக்குகிறார்கள்.

6. லம்பாடிகளும் தொம்பர் இவர்கள் நிஜாம் ராஜதானியிலும் மத்தியமாகாணங்களிலும் வசித்துக்கொண்டு அவ்விடங்களைச் சுற்றி கொள்ளையடித்துத் திரிகிறார்கள்.

7. திருட்டுஒட்டர்கள் இவர்கள் புதிதாய் கொள்ளையடிக்க ஆரம்பித்தவர்கள் இவர்கள் ஜனங்களை மிகவும் இம்சிப்பார்கள் இவர்கள் முக்கியமாய் நெல்லூர் கடப்பைமுதலான ஜில்லாக்களில் கொள்ளையடித்து வருகிறார்கள்.

8. எருகிகள், வடசர்காரிலுள்ள எருகிகள் அதிக பலமுள்ளவர்களாய் இல்லாமற் போனபோதிலும் கொள்ளையடிப்பதில் பெயர்பெற்றவர்களாய் இருக்கிறார்கள்.

முன்னமே ஊரூராக அலைந்து திரியும் திருடர்களைப்பற்றியும் அவர்கள் தங்கும் இடங்களுக்கு அருகாமையிலுள்ள சுற்றுப்பக்கங்களில் உள்ள இடங்களில் கொள்ளை அடிக்கிறார்கள் என்றும் தெரிவித்து இருக்கிறோம். இக்குற்றவாளிகளை இன்னும் இரண்டு பிரிவுகளாகப் பிரிப்போம். 1.வேறுமென்றேயாவது அல்லது ஏதோ ஒருகாரியத்தின் பொருட்டாயாவது சனங்களின் மத்தியில் இல்லாமல் தங்கள் கொள்ளைக்காக கிராமங்களுக்கு வெளியிடங்களில் வசிப்பவர்கள். 2-வது கிராமவாசைகளைப் போலவே ஜனங்களுடன் கூடிகலந்து வாழ்பவர்கள். இவர்கள் ஜனங்களுக்கு மிகவும் அபாயமானவர்கள். இவர்களில் வெகுகாலத்துக்கு முன் அதிகமான கூட்டம் கிடையாது. பூர்வகாலத்தில் ஜனங்கள் அதிகமாய் அயலிடங்களுக்குப் போக்குவரவு செய்ய இஷ்டமில்லாமலிருந்ததினால்அவர்களுக்கு கொள்ளையடிக்க வழிகிடையாமல் இருந்தது. ஆனால் இப்பொழுது நாகரீகமதிகரிக்கவும் ரெயில்வேமார்க்கங்கள் விருத்தியாகவும் இன்னும் வெவ்வேறு இடங்களுக்கு பயமில்லாமல் போக்குவரவுக்கு இடம்உண்டாயிருந்தும் திருட்டுத்தனத்தில் கெட்டிக்காரத்தனமும் நூதனமான மார்க்கங்களும் விர்த்தியாய்வருகின்றன பூர்வகாலத்தில்கள்ளர்கள் எவ்வழிகளிலும் இருந்ததினால் ஜனங்களுக்கு பத்திரம்கிடையாது. ஆனபோதிலும்அத்தியாவசியமாய் போகவேண்டிய இடங்களுக்கு ஜனங்கள் இக்கள்ளர்கள் உள்ளமார்க்கங்கள் தவிர வேறுமார்க்கங்கள் கிடையாது. இவ்வழிக் கொள்ளைக்காரர்கள் சொல்படி பிரயாணிகள் தங்களிடத்திலுள்ளவைகளைக் கொடுத்துவிட்டால்தங்களுடைய சரீரத்திற்கு யாதொரு உபாதி இல்லாமலும் பிராணஹானி இல்லாமலும் போய்ச்சேரலாம் இல்லாவிட்டால் சொத்து நஷ்டத்துடன் பிராணஹானியும் உண்டாகும் இப்பொழுதுரயில்மார்க்கம் ஏற்பட்டஇடங்களில் பூர்வத்தில் பிராணஹானிக்கு இடம் உண்டாயிருந்தது ஆனால் திருடர்களுக்கு அஜாக்கிரதையாயுள்ள ஜனங்களின் சொத்துக்களை அபகரிக்கமார்க்கங்களும்



அதிகமாயுள. ஜனங்களுக்கு பூர்வகாலத்தில் வழிப்பிரயாணங்களில் தங்களுடைய சொத்துக்களைக் காப்பாற்றுவதற்காக உண்டாகும் பிராணஹானியைக் காட்டிலும் இக்காலத்தில் உண்டான கொள்ளையானது அதிகபயத்தை உண்டாக்குகிறது.

பூர்வகாலங்களில் ஜனங்கள் அயலூருக்கு பிரயாணம் போகும் காலங்களில் தங்களோடுகூட விலையுயர்ந்த ஆபரணங்களைக் கொண்டு போவதில்லை. ஆனால் இக்காலத்திலோ தங்களுடைய சொந்த பூஷணங்கள் தவிர இரவலாகவும் கொடக்கூலிக்கும் வாங்கிக்கொண்டு போகிறார்கள். இதனால் திருடர்களுக்கு அதிக திரவியம் கிடைக்க இடம் உண்டாகிறது. இருப்புமார்க்கத்தின் அபிவிர்த்தியினால் முதல் வகுப்புகள்ள ஜாதிக்கு வழிமார்க்கங்களில் கொள்ளையடிக்க இடமில்லாமல் போய்விட்டது.

இவ்வழிக் கொள்ளைக்காரர்களுக்கு அவர்களுடைய வியாபாரத்தினால் அதிக லாபம் கிடையா. ஏனென்றால் ஜனங்கள் அபாயமான மார்க்கங்களில் போகாமலும் அப்படி போகும்படியான காலங்கள் நேரிட்டால் தகுந்த வழித்துணையோடு போவார்கள், இருப்புப்பாதைகளின் உபயோகத்தால் ஜனங்களுக்கு அதிக பயம்கிடையாது. தவிர வழிமார்க்கங்களில் இரண்டாவது வகுப்பைச்சேர்ந்த குற்றவாளிகளுக்கு வழிமறித்துப் பறிக்க இடம் உண்டாயிற்று. முதல் வகுப்பைச் சேர்ந்த குற்றவாளிகள் இப்பொழுது இவர்களோடு கலந்து அதிகமாய் விருத்தியடைந்திருக்கிறார்கள் இவ்விதமாக உண்டாகப்பட்ட குற்றவாளிகள் பார்வைக்கு பெருந்தன்மையும் சந்தேகத்திற்கு இடமுமில்லாமலும் இருக்கிறார்கள் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போகிற ஜனங்களின் பந்தோபஸ்துக்காக இரயில்வேஅதிகாரிகள் யாதொருஅக்கரையும் எடுத்துக்கொள்ளவில்லை. கொஞ்சங் காலமாகத்தான் நம்முடைய கெவர்ன்மெண்டார் ஜனங்களுடைய அபாயத்தைத் தெரிந்துகொண்டு ரெயில்வே போலீஸ் என்னும் ஒரு பிரத்தியேகமான போலீஸை ஏற்படுத்திருக்கிறார்கள். ரெயில்வே அதிகாரிகளின் அதிகாரமானது இருப்பு தண்டவாளங்கள் போட்டிருக்கப்பட்ட இடத்திற்குள்ளேயே செல்லவேண்டும் ஆனால் நம்முடைய இராஜாங்கத்தாருதோ எங்குவ்வியாபித்திருக்கிறது ஆகையினாலே நம்முடைய கெவர்மெண்டார் கிராமவாழிகளின் வழிப்பிரயாணங்களிலேயும் ஜனங்கள் தங்கும்படியான இடங்களிலேயும் சந்தைகளிலேயும் உற்சவங்களிலேயும் ஊர்கோலங்களிலேயும் ஜெனங்களையும் அவர்கள் சொத்துகளையும் பாதுகாப்பது கடமையாயிருக்கிறது. இந்த இரண்டாவது வகுப்பைச்சேர்ந்த திருடர்கள் விருத்தியாகாமலிருக்க தடுத்ததற்காக மிஸ்டர் எச். ஏ. ஸ்டுவார்ட் என்பவருக்கும் பாஸெட்என்பவருக்கும் நாம்வெகு வந்தனம்செய்யவேண்டும்.

இரண்டாவது வகுப்பைச்சேர்ந்த குற்றவாளிகளுக்குள் அளகிரி என்னும் ஜாதியார் மிகவும் பேர்பெற்றவர்கள் அவர்களைக்கண்டு பிடிப்பது கஷ்டம் ஆகையினால் அவர்களுடைய சரித்திரத்தைப்பற்றி கொஞ்சம்விவரித்துச் சொல்லுவோம்.

(1) அளகிரியும் பட்ரோஜாக்களும். இவ்வளகிரி ஜாதியினுடைய உர்பத்தியைப்பற்றியும் அவர்களுடைய மதத்தைப்பற்றியும் எப்,எஸ்,முல்லாலியென்பவர் சென்னை இராஜதானியிலுள்ள குற்றவாளிகளின் சரித்திரங்களைப்பற்றி எழுதியவிஷயபத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

மதுரை ஜில்லாவில் மதுரைப்பட்டணத்திற்கு வடக்கே 12 - மைல் தூரத்தில் கள்ளழகர் அல்லது திருடர்களுக்கெல்லாம் சுவாமி என்று அர்த்தம் கொடுக்கும்படியான ஒருகோவில் சில குன்றுகளின் அடியில் கட்டப்பட்டிருக்கிறது. அந்த ஜாதியாருக்கு அளகிரி என்னும் பெயர் அக்கோவிலின்பெயரிலிருந்து உண்டாயிருக்கிறது. அக்கோவிலின் தர்மகர்த்தாபடையாச்சி ஜாதியைச்சேர்ந்தவன். கள்ளழகரைத் தங்களுக்கு முக்கியதெய்வமாக அநேகம் குற்றவாளிகளின் ஜாதிகள் கொண்டாடுகிறார்கள். அவர்கள் கொள்ளையடிக்கும் தனத்தில் ஒரு பங்கை சேர்த்துவைத்து மார்கழி தைமாதங்களில் அதிகஆடம்பரத்தோடு கள்ளழகருக்கு சேர்த்து விடுகிறார்கள்.

(2) அளகிரியென்னும் பெயரானது திருட்டுத்தனத்தாலேயே ஜீவனம் பண்ணும் சில திருடர்களுக்கும் முடிச்சுமாறிகளுக்கும் ஜாதி இன்னதென்று தெரியாமலும் தங்களைப்பற்றி சரியான ரூபாந்தரம் கொடாமலும் போலீஸார் சந்தேகிக்கும்படியானவர்களுக்கும் உபயோகப்பட்டுவருகிறது.

(3) எல்லா ஜாதியைச் சேர்ந்த இந்துக்களும் சில சமயங்களில் துலுக்கரும் அவருடைய சிநேகத்திற்கு உள்ளாகிறார்கள். எப். எஸ். முல்லாலி என்பவராலும் பாப்பாராவ்நாயுடு என்பவராலும் இவர்களைப் பற்றி எழுதப்பட்டுள்ள உபயோகமான புத்தகங்களை நம்முடைய பத்திரிகை வாசிப்பவர்களுக்கு, அப்புத்தகங்களை வாங்கி மேற்படி ஜாதியர்களின் நடவடிக்கைகளைப்பற்றி நன்றாய் தெரிந்துக் கொள்ளும்பொருட்டு தெரியப்படுத்துவது நம்முடைய முக்கிய கடமையாயிருக்கிறது.

அளகிரி என்றால் திருடன் என்று அர்த்தம்; மேலும் ஊர்பெயர் முதலான சம்பந்தங்கள் யாதொன்றும் தெரியாத சில திருடர்களுக்காவது திருட்டுக்கூட்டங்களுக்காவது உபயோகப்படுத்தலாம்.

இவர்களை நம்முடைய கூட்டத்தில் தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்த [illegible] சோம்பேரிகளோடாவது அல்லது துஷ்டர்களோடாவது சேர்க்கக்



கூடாது ஏனென்றால் இவர்கள் திருடர்களல்ல; இவர்களை கைப்பிடியாய்ப் பிடித்துக்கொள்ளலாம் சாதாரண குடிகளுக்கு இவர்களால் அதிக அபாயம் கிடையாது இஜ்ஜாதியார்களை மிஸ்டர் பாபாராவ் என்பவர் தேட்டைக்காரர் அல்லது முடிச்சிமாறி என்று சொல்லுகிறார்.

இந்த அளகிரி ஜாதியாருடைய நடவடிக்கையானது தாங்கள் இருக்கப்பட்ட இடங்களிலுள்ள ஜனங்களிடத்தில் அதிகமாய் கலக்கிறதில்லை; ஏனென்றால் அவர்களுக்கு வேண்டிய சமாசாரங்களும் ஆட்களும் அவர்களிடத்திலேயே உள்ளது. அவர்கள் சுயஆதீனமுள்ளவர்கள்

---

## போலீசும் சட்டமும்.

சென்னை ஹைகோர்ட்டில் நடந்த ஒரு கேசு

சர். வி. ஜஸ்டிஸ். பாஷியமய்யங்கார் முன்னிலையில்

துரைசாமி பிள்ளை ... ... ... ... மனுதாரன்

இராஜாங்கத்தார் ... ... ... ... பிரதிவாதி

இந்த மனுதாரன் வெகுநாளாகத் தெரிந்த குற்றவாளி. இவன் ஒரு போலீசு சேவகனை இந்து தேசத்து தண்டனைச் சட்டத்தில் (I. P. C.) 353 - வது செக்ஷனில் கண்ட குற்றத்தை செய்ததற்காக 1902-ம் வருஷத்திய 426 - காலண்டர் நெம்பர் கேசில் சிதம்பரம் இரண்டாவது வகுப்பு ஸ்டேஷனரி சப்மாஜிஸ்திரேட்டால் தண்டிக்கப்பட்டான். அப்போலீசு சேவகன் மேற்சொன்ன குற்றவாளியானவன் வீட்டில் ஆஜரா யிருக்கிறானென்பதைப் பார்க்க நடு இராத்திரியில் அவன் வீட்டிற்குள் அவன் உத்திரவன்றிப் பிரவேசித்தான்.

சிதம்பரம் டிப்டி மாஜிஸ்திரேட்டினிடம் அப்பீல் செய்தும் அவர் கீழ் கோர்ட்டின் தீர்மானத்தையே ஸ்தாபித்தார் மனுதாரன் கிரிமினல், பொரிசிஜர் சட்டத்தின் 435, 439 - வது செக்ஷன்களின் பிரகாரம் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டு செய்த தீர்ப்பைமாற்றும்படி ஹைகோர்ட்டாருக்கு மனுபண்ணிக் கொண்டான்.

ஹைகோர்ட்டாரின் தீர்மானம்:—

இந்தியன் பினல்கோர்ட்டின் 353 - வது செக்ஷன் பிரகாரம் குற்றவாளியின் தண்டனையானது சரியல்லவென்பதும், அது நிலைநிற்காதென்பதும் தெளிவாய் விளங்குகிறது. மேற்சொன்ன போலீசு உத்தியோகஸ்தன் தனக்கு உதவியாக மற்று ஒரு சேவகனோடு அக்குற்றவாளி வீட்டில் இருப்பதைப் பரிசோதிக்கும்படி நடு இரவில் வீட்டின் கதவைத் தட்டியதானது நல்ல அபிப்பிராயத்தோடு செய்ததாகவும், ஒரு கவர்ன்

மென்டு உத்தியோகஸ்தன் செய்யவேண்டிய முறைமைப்பிரகாரம் செய்ததாகவும் தோன்றவில்லை. இந்தக்கேஸில் சம்பந்தப்பட்ட துரைசாமி பிள்ளை என்பவன் பழையகைதி என்பதும் அவனுடைய நடவடிக்கைகளை அடிக்கடி கவனித்து வரவேண்டியதும் உண்மையே, அதனால் வாதியானவன் குற்றவாளி வீட்டில் இருக்கிறதையும் இல்லாததையும் பார்க்க அவன் வீட்டில் பிரவேசிக்கவாவது அல்லது கதவைத் தட்டவாவது சட்டம் இடங்கொடுக்கவில்லை. மாஜிஸ்திரேட்டு எடுத்துக் காட்டிய போலீசு சர்குலரின் சட்டபிரகாரம் சட்டமானது அவ்வளவு நிபந்தனையோடு கூடியதாக இருக்கிறதென்று எனக்குத் தோன்றவில்லை. மேலும் அச்சட்டத்தில் வாதிசெய்தமாதிரி அனுசரிக்கும்படியாய் இருப்பதாகவும் புலப்படவில்லை. சந்தேகத்திற்கு இடமுள்ளவர்களை அடிக்கடி போலீசார் கவனித்துவர வேண்டியது நியாயமே. போலீசாருக்கும் தெரிவித்திருக்கும் சட்டபிரகாரம் அவர்களை அம்மாதிரி செய்யவேண்டியதுதான். ஆனால் அவர்கள் நியாயத்திற்கு யாதொரு விரோதமில்லாமல் அப்படிச் செய்யக்கூடும். துர் எண்ணத்தோடு அவன்வீட்டில் பிரவேசிக்கக்கூடாது. குற்றவாளியானவன் வீட்டிற்கு வெளியேவந்து போலீசாரைத்தள்ளியதும், திட்டியதும், மறுபடியும் உட்சென்று ஒரு தடியுடன் அடிக்கப்போகிற பாவனையாக ஓடிவந்ததும், அவனைத்தள்ளும் காலையில், தலைப்பாகையானது கீழே விழுந்ததும் நிசமாகவே யிருக்கலாம். மேற்சொல்லிய விஷயங்களினால் மனுதாரனானவன் அடித்தகுற்றத்திற்காக அவனைக் குற்றம்சாட்டலாம். அவன் தன்னுடைய ஆஸ்தியைக்காப்பாற்றும்பொருட்டு செய்திருந்தால்அப்படிப்பட்டகுற்றத்திற்கு உள்ளாகான்: போலீசு உத்தியோகஸ்தன் அக்குற்றவாளியினுடைய சந்தேகநடத்தைக்காக அவன் வீட்டில் பரிசோதிக்கும் பொருட்டு நடு இராத்திரியில் பிரவேசித்தலானது இந்தியன் பினல் கோட்டின் 442-வது செக்ஷன் பிரகாரம், உத்திரவின்றி பிரவேசித்தலாகிய குற்றத்தைச் செய்ததாக ஏற்படுகிறது. போலீசு சேவகன் செய்த காரியமானது வீட்டில் உள்ளவர்ளுக்குக் கோபமூட்டத்தக்கதே. மேலும் குற்றவாளியை அவமானப்படுத்தினது போலவும் ஆகிறது. மேற்சொன்ன இ. பி. கோட்டின் 104-வது செக்ஷன் பிர்காரம் மனுதாரன் வாதியைக் கொஞ்சம் அடித்துத் தொந்திரவு செய்தது சரியாகவே தோன்றுகிறது.

மேலும் போலீசு உத்தியோகஸ்தன் 99-வது செக்ஷன் பிரகாரம் நல்ல அபிப்பிராயத்தோடு செய்ததாகத் தோன்றவில்லை. இப்போலீசு உத்தியோகஸ்தனுடைய நடத்தையானது சட்டவிரோதமானபோதிலும் தன்னுடைய உத்தியோகத்தின் உதவியினால் அவன் வீட்டில் நடு இரவில் பிரவேசித்ததை ஸ்தாபிக்கக்கூடும் என்கிற எண்ணத்தைக் கொண்டு செய்ததாகத் தோற்றுகிறது. இம்மனுதாரன் யாதொரு குற்



றத்திற்கு உள்ளானவனா யிருந்தாலும், இவனுக்கு மூன்றுமாதம் கடுங்காவல் விதித்தலானது இக்கேசின் விவரப்பிரகாரம் மிகவும் கொடுமையாகத் தோன்றுகிறது ஆகையால் நாம் குற்றத்தையும் தண்டனையையும் தள்ளிவிட்டு குற்றவாளியையும் விடுதலை செய்தோம். சாமீன் பத்திரம் ரத்தாய்விட்டது."

இதனால் எல்லா போலீசு உத்தியோகஸ்தர்களும் தங்களிடத்தில் அதிகாரமுள்ளதென்று அவ்வதிகாரத்தை துர்விநியோகப் படுத்தக்கூடாது.

ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனும் அவனுடைய ரஜாவும்.

சென்னை ஹைகோர்ட்டில் ஆனரபில் ஜஸ்டிஸ் போடாம் முன்னிலையில் நடந்த கேஸின் விவரம்.

மதுரை ரிசர்வ் போலீஸில் வேலையாயுள்ள ராமசாமிராஜு என்பவன் தன்னுடைய ரஜாமுடிந்த உடனே வேலையைவந்து மறுபடியும் ஒத்துக்கொள்ளாததற்காக 1859-வருஷத்திய 24-சட்டத்தின் 44-செக்ஷன்பிரகாரம் மதுரைப் பட்டணம் சப்மாஜிஸ்டிரேட் 22-ரூபாய் அபராதம் கட்டும்படி தண்டித்தார். இக்குற்றவாளியானவன் 1904-ம் வருஷ எப்பிரல் மாஸம் ரஜாவுக்கு மனுகொடுத்துக் கொண்டான் ஆனால் ரஜா கொடுக்கப்படவில்லை மறுபடியும் அதேவருஷத்தில் மே மாஸம் 3ந்தேதியில் மூன்றுநாளைக்கு ரஜாவாங்கிக் கொண்டான் இந்த ரஜா முடியும் முன்னேயே தனக்கு மூன்றுமாதம் ரஜாவேணுமென்று மனுசெய்து விட்டு வீட்டிலேயே நின்று விட்டான் அதற்காகத்தான் இவனை பிராஸிகியூஷன் செய்தார்கள்.

மேலூர் சப்டிவிஷனில் மாஜிஸ்திரேட்டினிடம் அவன் அபீல்செய்த திலப்பீலில், அவன் செய்த குற்றமானது அந்த சட்டத்தினுடைய 44-செக்ஷன் பிரகாரம் ரஜாகாலம் ஆனவுடன் வேலையை வந்து சேராதது தப்பாகுமாவென்று யோசித்து, ரஜா வாங்கிக்கொள்ளாமல் நின்றுவிடுகிறது தப்பென்றும் தண்டிக்கத் தக்கதென்றும், ரஜா கடந்த உடனே வேலையைச் சேர்ந்து வேலையைச்செய்யாதது தண்டிக்கத்தகாததென்றும், தீர்மானம் செய்துகொண்டு மாஜிஸ்திரேட்டு செய்ததீர்மானத்தை மாற்றிவிட்ட சப் டிவிஷன் மாஜிஸ்திரேட்டின் தீர்மானத்தின் மேல் பப்ளிக் பிராஸிகியூடர் ஹைகோர்ட்டில், கீழ் அபீல் கோர்ட்டில், அப்போலீசு உத்தியோகஸ்தனானவன் ரஜாமுடிவானதும் வந்து வேலையைச்சேராதது, தன்வேலையை நிறைவேற்றாத குற்றத்தைச் செய்ததாக எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று அபீல் செய்தார். அபீலும் அங்கீகரிக்கப்பட்டது.

## நாய்களைப் போலீஸில் உபயோகிக்கும் முறைமை.

ஜூலைமாதத்தில் பிரசுரப் படுத்தி வரும் ஒருபத்திரிகையில் ஐரோப்பாக்கண்டத்திலுள்ள பெல்ஜியம் தேசத்தில் நாய்களை போலீஸில் உபயோகப்படுத்தி வரும் முறைமையைப்பற்றி மிஸ்டர் ஜே வி விட் பி என்பவர் ஒரு சரித்திரம் எழுதி யிருக்கிறார். பழய நாய்கள் தங்கள் பாஷையினாலேயே தங்களுக்குத் தெரிந்துள்ள தந்திரங்களையும், அரகசியங்களைக் கற்றுக்கொடுக்கக்கூடும். பெல்ஜியத்திலுள்ள பிரஸல் நாட்டில் சிறிய போலீஸ் நாயை மூன்று மாதகுட்டியாய் இருக்கும்காலத்திலேயே பிரதமசிட்சை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்கள். சிலசுருசுருப்புள்ள நாய்கள் தங்களுடைய படிப்பை ஒரு வயதுக்குள் முடித்துக்கொண்ட போதிலும் அதற்குக் கற்றுக்கொடுக்கிறவன் அதற்கு இரண்டு வயது ஆகும் வரைக்கும் பாடங்களை ஆரம்பித்து காண்பிக்கவேண்டுமென்று விரும்புகிறான். அதற்குள்ளாக நாய்களுக்கு யுக்தாயுக்தங்களைக் கண்டுபிடிக்கும் விதம் வந்து விடுகிறது அவைகளின் மனச்சலனமும் போய்விடுகிறது. சரியான போலீஸ் உத்தியோக முறைமையை அடைய அவைகளுக்கு மூன்று மாத பிரதமசிக்ஷை போதும்.

ஒவ்வொரு நாயும் ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தனிடம் ஒப்புவிக்கப்படுகிறது. அது அவன்போன்ற எல்லாபோலீஸ் உத்தியோகஸ்தர்கள் சொல்படி கேட்டபோதிலும் அது எந்த எஜமானனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதோ அந்த எஜமானனிடத்திலேயே எப்பொழுதும் இடைவிடாமல் இருக்கும் இந்நாய்கள் இருட்டின உடனே இப்போலீஸ் சேவகர்களுடன் அவர்கள் ரோந்துகளில் தனி இடங்களிலே மனிதர்கள் இல்லாத வீடுகளின் பக்கங்களிலேயும் திருடர்கள் பதுங்கிக்கொண்டிருக்கும்படியான இடங்களிலேயும் போகும். அவைகள் சில மணிநேரந்தான் வெளியே இருக்கவேண்டியது. அக்காலத்திற்குள் அவைகளால் செய்யவேண்டிய வேலையை சரிவர நடத்திவிடுகிறது அவைகளின் முதல் ரோந்து இரவில் 10 - முதல் 4 - மணிவரையிலும்தான்.

நாயானது வேட்டையில் மிகவும் பிரியமுள்ள பிராணி. அது, கந்தைத் துணிகளோடும் பார்வைக்கு விகாரமாயுமுள்ள மனிதர்களைத்தான் கண்டு பிடிக்கவேணுமென்றுத் தெரிந்துக்கொண்ட உடனே இப்புத்தியுள்ள செந்து நல்லவர்களைத் தொடாமலே திருடர்களையும் நாடிகளையும் கண்டு பிடித்துவிடுகிறது அதின்வாயில் பூட்டுபோட்டிருப்பதனாலே அதன் இஷ்டபிரகாரம் அதற்கு செய்ய சாத்தியப் படுகிறதில்லை. ஏனென்றால் கள்ளர்கள் அநேக தடவைகளில் அவைகளுக்கு விஷம் சம்பந்தப்பட்ட பலகாரங்களைக் கொடுப்பதனாலே அது அவைகளைத் தின்னவொட்டாமல் பாதுகாப்பதின் நிமித்தமாகவே அவைகளின்



வாய்க்கு பூட்டுபோடப் பட்டிருக்கிறது. அப்படி போடப்பட் டிருந்த போதிலும் அவைகள் மிகவும் சுருசுருப்பாய்த் திருடர்களைக் கண்டு பிடிக்கின்றன.

அதின் வாயில் போடப்பட்டிருக்கும் பூட்டானது சுருக்கவும் நீளவுங்கூடும் வேண்டியகாலத்தில் சுலபமாய் கழற்றிவிடலாம்.

கெண்டு பட்டணத்தில் போலீஸ் நாய்களுக்கும் இன்னும் ஆட்டு நாய்களுக்கும், மற்றும் சில நாய்களுக்கும் மெழுக்குத் துணியால் போர்வைபோடுகிறார்கள்.

ஜர்மனி தேசத்தில் போலீஸ் நாய்களுக்கு வாய்ப்பூட்டு போடுகிறதில்லை.

பிரஸல்ஸ் பட்டணத்தில் போலீசு நாயினால் உண்டான நன்மையைப்பற்றி அவ்விடத்திய போலீஸ் கமிஷனர் பின்வருமாறு எழுதுகிறார்.

நாய்களை உபயோகப் படுத்து முன் பிரதி வருஷமும் மனுஷியர் வீடுகளைப் பூட்டிக்கொண்டு வெளியே போயிருக்கும் சமயங்களில் சுமார் பன்னிரண்டு வீடுகளை கொள்ளையடிப்பார்கள். போலீஸாருக்கு நாயின் உதவி கிடைத்தகாலம் முதல் நான்கு கொள்ளைகளுக்கு அதிகம் கிடையாது. ஜனங்கள் அதிகமாக நடமாடுகிற ரஸ்தாக்களில், வழிப்போக்கர்களை அடிப்பதும். அந்நாய்கள் உபயோகப்பட்டுவரும் இடங்களில் நின்றுப் போய்விட்டது.

சில நாளைக்கு முன்பாக பர்க்குமான் பட்டணத்தின் ஒரு பெரிய ரஸ்தாவில் ஒருபெரியவீட்டில் கொள்ளை நடந்தது. திருடன் சமீபத்திலேயே இருப்பதாகத் தெரிந்தபோதிலும் அவனைக்கண்டு பிடிக்கமுடியவில்லை. கால்மைல் தூரத்தில் ரோந்தில் நாய் இருப்பதாய்த் போலீஸ சேவகனுக்குத்தெரிந்திருந்ததினாலே உடனே பிகில்குடுத்ததன் நாய் அவ்விடத்திற்கு ஓடிவந்து இங்கும் அங்கும் ஓடி தன் மோப்பத்தினாலே தோட்டத்தில் ஒரு சின்ன புதருக்குள் ஒளிந்துக்கொண்டிருந்த திருடனைக் கண்டுபிடித்துவிட்டது. இந்தப்புதரை இதுவரையில் அப்போலீசு உத்தியோகஸ்தன் பரிசோதிக்கவே இல்லை. அந்தத்திருடன் ஜெயிலிலிருக்கும் காலையில் தன் சிநேகிதன் ஒருவனுக்குத்தான் அந்த நாய் இல்லாவிட்டால் தப்பி ஓடியிருப்பேனென்று எழுதியதை போலீஸார் அறிந்துக் கொண்டார்கள்.

மற்றொருநாய் சில திருடர்கள் வீட்டின் கூரைமேல் ஏறி ஓடும் பொழுது அவர்களைத் துரத்திக்கொண்டே போயிற்று. அதை வீதியில் சனங்கள் எல்லோரும் வேடிக்கைப் பார்த்தார்கள். திருடர்கள் ஒரு குடியில்லாத வீட்டின் மேலே சூரியவெளிச்சத்திற்காக வைத்திருக்கும் சன்

னலின் வழியாய் விட்டிற்குள் இரங்கி சன்னல் கதவைமூடிக்கொண்டதும் நாய் மிகவும் விசனமாகத்தன் எஜமனனிடம் திரும்பி வந்துசேர்ந்தது.

---

# வர்த்தமானக் குறிப்புகள்.

## சென்னப் பட்டணம்.

செப்டம்பர் 13உ

மிஸ்டர். அசிஸ்டென்காஷிப் பஹதூர் முன்னிலையில்,

அல்ப லஞ்சத்திற்கு ஆசைப்பட்டு வேலையை இழந்தது மல்லாமல் தண்டனைக்கும் உள்ளானது.

எச். டிவிஷன் போலீசைச் சேர்ந்த முனுசாமி நாயக்கன் என்பவன் சென்ற ஜூலை 15உ சென்னை வால்டாக்ஸ் என்று வழங்கும் படியான ஒத்தவாடையில் ஒரு அரிசி வியாபாரி ரத்தினநாயக்கனிடமிருந்து ஒரு ரூபாய் லஞ்சம் வாங்கிக்கொண்டான்.

சென்ற ஜூலை 12உ மேற்சொன்ன அரிசி வியாபாரியின் குமாரனாகிய எருமலை என்பவன் குற்றம் சாட்டப்பட்டு 25-ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டான். அவர்கள் அபராதம் கட்டிவிட்டு கச்சேரியிலிருந்து வெளிவருங்காலையில், பிராசிக்யூஷன் தரப்பில் சம்பந்தப்பட்டவனாகிய முனுசாமி நாயக்கன் தனக்கு ஒன்றுமில்லையா வென்று அவர்களைக்கேட்டான். அதற்கு அம்முனுசாமி நாயக்கன் நீங்கள் என்னுடைய மகனுக்கு 25-ரூபாய் அபராதம் விதிக்கும்படிசெய்து விட்டீர்களே இன்னும் உங்களுக்கு என்னவேணுமென்றான். அதன்மேல் அப்போலீசுசேவகன் இதுமாத்திரமல்ல இன்னும் சிலர் உன்னுடைய மகனை ஜெயிலிலடைக்கும்படி பிரயத்தனப் படுகிறார்கள். ஆகையால் நீங்கள் எனக்கு இரண்டு ரூபாய் கொடுக்கும் பக்ஷத்தில் அப்படிக்கொத்த விஷயம் யாதொன்றும் நடவாதபடி பார்த்துக் கொள்வதாகச் சொன்னான். இதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் அப்பொழுது அவனுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. சிலநாள் சென்றபின் குற்றவாளி மேற்படியானுடைய மண்டியினிடம் போய் கேட்கையில் இரத்தின நாயக்கன் சிலசாக்ஷிகளை முன்னிலையில் ஒருரூபாய் அவனிடம் கொடுத்துவிட்டு உடனே மேற்படி சமாசாரத்தை C. டிவிஷன் 2-வது போலீஸில் தெரிவித்தான். உடனே அவனை சோதனை செய்யுங்காலையில் நடந்தசமாசாரம் உண்மையாகவே அவனைக்குற்றவாளியாக்கினார்கள்.



இரண்டு தரப்பு சாக்ஷிகளையும் விசாரணை செய்து மாஜிஸ்ட்ரேட்டு அவனிடம் குற்றத்தை நிசம் என்று தெரிந்துகொண்டு அவனை ஆறுமாதம் கடுங்காவலில் இடும்படி விதித்தார்.

ஆகையால் அல்பத்திற்கு ஆசைப்பட்டால் நம்முடைய கௌரவத்துக்கு ஹானியும் ஜீவனோபாய ஹானியும் உண்டாவதுடன்கூட சிக்ஷையும் கிடைக்கிறது.

ஆகையால் நம்மதேசத்து போலீசாரும் இன்னும் மற்ற எவ்வித உத்தியோகஸ்தர்களும் இவ்விதமான செய்கைக்கு உட்படக்கூடாது.

### 1. கண்ணியமற்ற கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள்.

பெங்களூர் உப்பார்பேட்டை போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த போலீஸ் ஸார்ஜெண்டு ஒருவன் அப்பட்டணத்து மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் 150-ரூபாயுள்ள ஒருபை பணத்தை எண்ணுகையில் ஒருரூபாயைத் திருடிக்கொண்டான். மாஜிஸ்டிரேட் சரியாயிருக்கிறதா என்று கேட்டகாலத்தில் சரியாயிருப்பதாக ஒத்துக்கொண்டான். மறுபடியும் பணத்தை எண்ணச்சொல்லுகையில் ஒருரூபாய் குறைந்தது. அந்தஸார்ஜெண்டு தானே ரூபாயை திருடியதாக ஒத்துக்கொண்டான். மாஜிஸ்டிரேட் இவனுடைய குணத்தைப்பற்றி மேலதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறார். இவனுக்கு இந்த உத்தியோகத்தில் 13-வருஷ ஸர்வீஸ் உள்ளது.

---

### 2. போலீஸார் அபகரிப்பு.

கோலாரைச்சேர்ந்த இரண்டு எட்கான்ஸ்டேபில்கள் 16வயதுள்ள ஒருசிறுவனிடமிருந்து சில சொத்துக்களை அனியாயமாக அபகரித்ததற்காக சிறையில் அடைக்கப்பட்டார்கள். மிஸ்டர் பிரௌனிங் என்பவரால் விசாரிக்கப்பட்டுமறுஸெஷனுக்கு ஆஜராகும்படி உத்தரவளிக்கப்பட்டது.

---

### 3. மிகவும் கொடுமையான குற்றம்.

கோலார் ஜில்லாவைச்சேர்ந்த சீனிவாஸபுரம் தாலூக்காவில் 5 வயதுள்ள ஒரு சிறுபெண்ணை அதன் மாமன் ஒருவயலுக்கு இட்டுக்கொண்டு போய் அதனிடத்திலுள்ள சொல்ப நகைகளை திருடிக்கொண்டு பலாத்காரமாய் அக்குழந்தையின் கற்பை அழித்ததனால் குழந்தை உடனே இறந்துவிட்டது. குழந்தை இறந்ததென்று தெரிந்தவுடனே குழந்தையைப் புதைத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டான். பெற்றோர்கள் குழந்தையைக் காணாமல் தேடிக்கொண்டிருக்கையில் தானும் தேட ஆரம்பித்து போலீஸார் இடத்தில் தெரிவித்துக்கொண்டான். போலீஸார்

அதன்பேரில் விசாரித்து புதைத்த குழந்தையை கண்டெடுத்தகாலத்தில் தான்செய்த குற்றம் முழுவதுக்கும் ஒப்புக்கொண்டான். அவனை சிறைச்சாலையி விட்டிருக்கிறார்கள்.

## 4. போலீஸ் சேவகர்களின் சம்பளம்.

பெங்களூர் பட்டணத்திலுள்ள போலீஸ் சேவர்களின் சம்பளத்தை விருத்திசெய்யும்படி கவர்ன்மெண்டாருக்கு எழுதியிருக்கிறார்கள். அநேகம்பெயர் வேலையை விட்டுவிட்டதினாலும், சம்பளம் அதிககுறைவாயிருப்பதினாலும், மனிதர்கள் கிடைப்பது அருமையாயிருப்பதினாலும், இப்பொழுது கொடுக்கப்பட்ட எழுரூபாயை லவ்வில் மிலிடேரி உத்யோகங்களில் குறைவான சம்பளம் ஒன்பதுரூபாயாய் இருப்பதினால் இதையும் அம்மாதிரியாகவே செய்தால் அநேகர்கிடைக்கலாம். இப்பொழுது முப்பது போலீஸ் சேவகர்களுக்கு வேலை காலியுளது.

## 5. தைரியத்தோடு தப்பித்துக்கொண்டுபோன ஒருகைதியின்சரித்திரம்.

பெங்களூர் சென்ட்ரல் ஜெயிலில் பதினெட்டுவருஷகாலம் கடுங்காவலில் இருக்கும்படி தண்டிக்கப்பட்ட ஜோஸப் என்னும் பெயருடைய கைதி ஒருநாள் காலையில் தப்பித்துக்கொண்டு ஓடிப்போய்விட்டான். வழக்கப்பிரகாரம் அந்ததினம் காலை கைதிகளைப்பார்ப்பதற்காக தப்பி ஓடிப்போன ஜோஸப் என்பவனைத்தவிர மற்றெல்லாகைதிகளையும் ஜெயிலின் [illegible]ரில் வரிசையாக நிறுத்தி சோதனை முடிந்தவுடனே மேற்சொன்ன கைதியானவன் காணப்படவில்லை. தேடிப்பார்க்கையில் தன்னுடைய விலங்கையும் உடுப்பையும் ஜெயிலின் பக்கத்தில் மூலையில் எறிந்துவிட்டு ஓடிப்போய் விட்டான் என்று தெரியவந்தது. அவனைத் தேட மனிதர்களை அனுப்பி இருக்கிறார்கள். போலீஸாருக்கும் அதைப்பற்றி தெரிவித்திருக்கிறது. ஆனால் இன்னும் அவன் அகப்படவில்லை.

### இரங்கூன்.

## 6. குற்றம் செய்தவன் தண்டனையடைந்தது.

இரங்கூன் மேமீ 29வ. இன்று மாலை சான்மே என்கின்ற ஒரு சீனதேசத்துச் சிறுவன் எட்ஸ், கன்னல், லெண்டெயின், என்பவர்களின் ஆபீஸின் முன்னிலையில் வந்து ஊாக்கான் என்னும் சீனதேசத்தவனை கொலைசெய்தவன் தான்தானென்றும், குற்றம்சாட்டப்பட்டு மரணதண்டனை அடையும்படி விதிக்கப்பட்ட பர்மாதேசத்து போலீஸ் குமாஸ்தாவாகிய ஒிலாகை என்பவன் அல்லவென்றும் ஒத்துக்கொண்டான். சான்மோ என்பவன் மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் வாக்குமூலம் கொடுப்பதற்காக ஒத்துக்கொண்டான். அவனை டிஸ்டிரிக்டு மாஜிஸ்ட்ரேட்டாகிய டாஸன் என்பவர் முன்னிலையில் வாக்குமூலத்திற்காக இவனை கொண்டுபோய்விட்டகாலத்தில் ஸெஷன் ஜட்ஜுசெய்த தப்பு தீர்மானத்திற்காகத்தான் இம்மாதிரியான வாக்குமூலம் கொடுத்ததாகவும் தான் ஒருவரு



டைய தூண்டுதலின்மேல் செய்ததில்லை யென்றும் தான்விரும்பிய தெல்லாம் ஒிலாகை என்பவனை மரணதண்டனை அடையாதிருக்கும் பொருட்டும் செய்ததாக ஒத்துக்கொண்டான். இந்நிலையில் மாஜிஸ்டிரேட்டு ஆலோசனைசபையில் யோசிப்பதாக தீர்மானித்தார்.

## 7. ஒருநன்றியற்ற விருந்தாளி.

சென்னைப்பட்டணம் வரதாமுத்தியப்பிள்ளை தெருவில் ஸ்ரீநிவாஸநாயுடு என்னும் ஒருவியாபாரி தன்னுடைய சகோதரன் கலியாணத்திற்காக உபயோகப்படுத்தப்பட்ட அநேக நகைகளையும் ஐந்நூறு ரூபாய் பெறுமான ஒரு முத்துமாலையையும் தன்மாடியின்மேல் அறையில் ஒரு இரும்பு கைப்பெட்டியில் வைத்துப்பூட்டி அப்பெட்டியின் சாவியை தன் மருமகன் இடத்தில்கொடுத்துவிட்டு அடுத்தத் தெருவில்நடக்கும் கலியாணத்திற்காக போனான். கொஞ்சநேரத்திற்கெல்லாம் பக்தவச்சலு என்னும் ஒருவன் மிகவும் ஆத்தரத்துடன் வீட்டிற்குள் வந்து மருமகனை கேட்டு அவன் மாமன் சாவியைவாங்கிக்கொண்டு வரச்சொன்னதாக கேட்டான். அப்பொழுது அவன் ஸ்நானம்செய்துக்கொண்டிருந்தான். மேற்சொன்ன செட்டி உடனேமாடியின் மேல் போய் பெட்டியை திறந்துஅம்முத்துமாலையை எடுத்துக்கொண்டான். அந்தக்ஷணத்தில் அவ்வீட்டின் சொந்தக்காரனை வீராசாமிநாயுடு என்பவன் மாடியின்மேல் போகவும் அவனைக்கைப்பிடியாக பிடித்துக்கொண்டான். இதற்குமுன்னுகவே தண்டனை அடைந்ததினால் இவனை ஒன்பதுமாதம் கடுங்காவலில் வைக்கும்படி தீர்மானம் செய்யப்பட்டது.

## 8 ஒருஉடன்பிறந்தாளைத் திருடியது.

16 வயதுக்கு மேல்பட்ட ஒரு கோமுட்டிச் சிறுவன் தன்உடன்பிறந்தாளாகிய காமாட்சிஅம்மாளின் நானூறுரூபாய் பெறுமான இரண்டுகழுத்துப் பொன்சங்கிலிகளைத் திருடிக்கொண்டான். அவள் தன் தாயார் வீட்டுக்குப் போயிருந்து அன்றையதினம் இராத்திரி நகைகளை கழற்றிவைத்தாள். மறுநாட்காலையில் நகைகளையும் அப்பையனையும் காணோம். குற்றவாளி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். தான் மேற்படி நகையை விற்கும்படி சின்னசாமி என்பவனிடத்தில் கொடுத்ததாகச் சொன்னான். அவன் அகப்படவேயில்லை. கோர்ட்டார் இப்பையனுடைய வாலிபத்தனத்திற்கும் அவனுக்கும் காமாட்சி அம்மாளுக்கும் உண்டான உறவிற்காகவும் அவனை ஒருமாதம் கடுங்காவலியில் வைக்கும்படி விதித்தார்.

## 9. நகைகளை கடன்கொடுப்பதினால் உண்டாகுமநிலைமை.

ஆரோக்கியம் என்பவன் இராயபுரத்தில் நடக்கும் ஒருவைதீக சடங்கைப்பார்க்கவேண்டுமென்று பாசாங்குசெய்து தன்மைத்துனி அலமேலம்மாளிடமிருந்து 150 ரூபாய் பொறுமான ஒரு ஜதை கைக்கொலுசு இரவலாக வாங்கிக்கொண்டுபோய் அநேகந் தடவைகளில் கேட்டும்கொ

டன்மையநல் போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் ஆகிய நிகோலஸ் என்பவரிடம் பிரியாதுசெய்து மேற்படி நகைகளை பெற்றுக்கொண்டாள். ஆனால் அச்சங்கிலியின் திருகுகளைமாத்திரம் திருப்பிக்கொடுக்கவில்லை. விசாரித்ததின் பேரில் அதை ஒரு மார்வாடியினிடம் கொதுவுவைத்ததாகத் தெரிந்ததின்பேரில் அவனுக்கு பதினைந்து ரூபாய் அபராதம் கட்டும்படிக்காகவாவது அல்லது மூன்று மாதம் ஜெயிலிலிருக்கும்படியாவது தண்டித்தார்.

## 10. மோசம்.

ஒருனாள் மங்கம்மாள் என்னும் பெண்பிள்ளை சிந்தாத்திரிப்பேட்டையிலிருந்து ஜெனரல் ஆஸ்பத்திரியின் வழியாய் வந்துக்கொண்டிருக்கையில் யாரோ இருவர் அவளிடம்வந்து ஒரு கில்ட் சங்கிலியை பொன் சங்கிலி என்பதாகவும் அதை அவர்கள் வழியில் கண்டெடுத்ததாகவும் இருபத்தைந்து ரூபாய்க்கு விற்றுவிட பிரியப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். அப்பெண்பாவினிடத்தில் பணமில்லாமையால் தன்காதில்போட்டுக்கொண்டிருந்த சுமார் ஐம்பது ரூபாய் பொறுமான ஒரு ஜதை கம்மல்களை கழற்றிக் கொடுத்துவிட்டு மேற்படி நகையைப் பெற்றுக்கொண்டாள் அவள் அதைக் கில்ட்செங்கிலியென்று தெரிந்துக்கொண்டு மேற்படி சமாசாரத்தை போலீசார்க்கு தெரிவித்தாள்.

## பத்திராதிபர் அறிவிப்பு.

இப்பவும் இப்பத்திரிகை பிரதி மாதமும் தவறாமல் பிரசுரிப்படுத்தப்பட்டுவரும் இதைப்போலவே சென்ற எட்டுமாதங்களாக ஆங்கிலேய பாஷையிலும் ஒரு பத்திரிகை பிரதி மாதமும் அச்சிடப்பட்டு வருகின்றது. மேற்படி ஆங்கிலேய பத்திரிகையானது வெகுவாய் அனேகம் [illegible] உத்தியோகஸ்தர்களால் வாங்கப்பட்டு வருகிறது. அதேமாதிரியாய் இத்தமிழ் பத்திரிகையும் எல்லோராலும் அமோதிக்கப்படுமென்று வெகுவாய் எண்ணுகிறோம். இதில் போலீஸ் சம்பந்தமான அனேகவிஷயங்கள் அடங்கியிருப்பதும் தவிர அனேக கேசுகளின் விபரமும், அயல் தேசங்களில் கண்டு பிடிக்கப்பட்ட அனேக திருட்டு சமாசாரங்களும் இன்னும் போலீசாருக்கு [illegible]யமான அனேகம் விவரங்களும் அடங்கியிருக்கும்.

இப்பத்திரிகையானது போலீசு சம்பந்தமான விஷயங்களில் மிகவும் சாமர்த்தியமுள்ள ஒருவரால் அச்சிடப்பட்டுவருகிறது.

இந்த முதல் பிரதியை எல்லோருக்கும் இலவசமாக அனுப்புகிறோம். தேவையில்லாதவர்கள் உடனே எங்களுக்குத் தெரிவித்துவிட்டால் மிகவும் நன்மை. தேவையுள்ளவர்கள் இதைக்கண்டவுடன் எங்களுக்கு இரண்டுரூபாய் மணியார்டர் செய்துவிட்டால் அதிக காபிகள் சரிவர அனுப்பலாகும்.

வி. பி. மூலமாகப் பெறுகிறவர்களுக்கு மொத்தத்திற்குச்சந்தா ரூபா 2-8-0.

எட்டுஆர்டர் சேர்த்துக்கொடுக்கிறவர்களுக்கு ஒரு காபி இனாமாகக் கொடுக்கப்படும் மேலும் பத்திரிகையில் அச்சிடக்கூடிய சமாசாரம் எழுதுகிறவர்களுக்கு தகுந்தபரிசு கொடுக்கப்படும்.

பத்திராதிபர்.

142385.
JL
Z211, 193m NOS
NOS. 1-1

## தேவை! ஏஜண்டுகள் தேவை!!

நமது பத்திரிகைக்கு சந்தாதாரர்களை சேர்க்க வெளியூர்களில் ஏஜண்டுகள் வேண்டும். [illegible] சந்தா சேர்த்துக் கொடுப்போருக்கு ஒரு வருஷத்திய பத்திரிகையாவது அல்லது அதன் சந்தாதொகையாவது [illegible] மிஷன் கொடுக்கப்படும்.

நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர்க்கும் ஒரு பத்திரிகை இனாமாய் தரப்படும்.

பத்திராதிபர்.

---

## விளம்பரம்.

போலீஸ் சம்பந்தமான பத்திரிகைகள் இதுவரையில் இல்லாமையை உணர்ந்து இப்பத்திரிகையை பிரசுரிக்கத் துணிந்தோம். இது போலீ[illegible] காரவிலுள்ள எல்லோருக்கும் மிக அவசியமானதையால் தங்களுக்கு[illegible] அனுப்பியிருக்கிறோம். இத்துடன் அனுப்பியிருக்கும் கார்டை [illegible] சம் முதலியவற்றைப் பூர்த்திசெய்து சந்தாதொகையுடன் [illegible] பிவிட வேண்டியது. இதை சேர்ப்ப சம்பளமுள்ள கான்ஸ்டேபி[illegible] ருக்கவேண்டுமென்றே வருஷசந்தா குறைந்த சார்ஜாக 2—8— [illegible] யுடிருக்கிறது.

[illegible] தட—நாளது அக்டோபர்மீ 31உக்குள் கார்டை [illegible] ம் கட்டுவோருக்கு மட்டும் வருஷ சந்தா ரூபா. 2—0— [illegible] ரிகைக்கு சேரும் முதல் 2—0—0 சந்தாதாரர்க[illegible] லிஷன் ரிபோர்ட்டு ஒன்று இலவசமாய் கொடுக்[illegible]

[illegible] யன் போலீஸ் ரிவ்யூ ஆபீஸ்,

சௌகார்பேட்டை,

சென்னை